பக்கங்கள்: 12
விலை : 30/-
# காலைக்கதிர்
Kālaikathir
விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 08 திங்கட்கிழமை 22.06.2020 கதிர் 229

**இது ரகசியம் அல்ல!**

மனிதஉரிமைகள்விவகாரத்தில் தனக்கு எதிராகத் தூக்கிப் பிடிக்கும் மேற்குலகுக்கு இராஜதந்திர ரீதியில் ஒரு சூடு வைக்க முயன்றிருக்கின்றது இலங்கை.

ஓரிரு தினங்களுக்கு முன்னர் சத்தம் சந்தடியின்றி அரங்கேறிய இந்த விவகாரம் பக்கம் 02

# தமிழர்கள் ஒருபோதும் அடிபணியமாட்டார்கள்

## அடக்குமுறைகளைத் தகர்த்தெறிய சாத்வீக ரீதியில் தீவிரமாகப் போராடுவார்கள் என்கிறார் சம்பந்தன்



கொழும்பு, ஜூன் 21

தமிழர்கள் தன்மானம் உள்ளவர்கள். எனவே, இனவாதிகளால் முன்னெடுக்கப்படும் அடக்குமுறைச் செயற்பாடுகளைக் கண்டு அவர்கள் ஒருபோதும் அடிபணிய மாட்டார்கள். சர்வதேச ஆதரவுடன் அடக்குமுறையைத் தகர்த்தெறிய சாத்வீக ரீதியில் அவர்கள் தீவிரமாகப் போராடுவார்கள்.

– இவ்வாறு உறுதிபடத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். பக்கம் 02

## முழுமையான இராணுவ ஆட்சியே கோட்டாபய அரசால் அரங்கேற்றம்

### பகிரங்கமாகச் சாடினார் ரணில்



கொழும்பு, ஜூன் 22

ஜனநாயக ஆட்சி, சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் ஆகிய இரண்டையுமே முற்றாக ஒழித்துக்கட்டிக் சர்வாதிகார நிலைகொண்ட பூரண இராணுவ ஆட்சியை நோக்கிய பயணமாகவே தற்போதைய அரசின் முன்னேற்பாடுகள் காணப்படுகின்றன. எனவே, இலங்கையில் மக்களை நேசிக்கக் கூடிய ஜனநாயக ஆட்சியை ஐக்கிய தேசியக் கட்சியால் மாத்திரமே உறுதிப்படுத்த முடியும்.

– இவ்வாறு முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று அவர் விடுத்துள்ள விசேட பக்கம் 02

## வல்லிபுரம் ஆழ்வாருக்கு இறுக்கமான கட்டுப்பாடு

கொழும்பு, ஜூன் 22

வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் அடியவர்கள் ஒன்றுகூடி வழிபாடுகளில் ஈடுபட இறுக்கமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என கோவிட் – 19 நடவடிக்கைக்குப் பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

எனினும் பூஜை நடத்துவதற்குதடை விதிக்கப்படவில்லை என்றும் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய 50 அடியவர்களே வழிபாடுகளில் ஈடுபட முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பக்கம் 02

## ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் சுகாதார அலுவலர்கள் நியமனம்

கொழும்பு, ஜூன் 22

நாடாளுமன்றத் தேர்தல் பணியின்போது நாட்டின் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஒரு சுகாதார அலுவலர் நியமிக்கப்படுவார் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வாக்குப்பதிவு காலத்தில் சுகாதார அமைச்சு வழங்கிய பாதுகாப்பு வழிகாட்டுதல்களுக்கு இணங்க தேர்தல் அதிகாரிகளை பக்கம் 02

## இளையோர் அணி விக்கிக்கு ஆதரவு

புதுக்குடியிருப்பு மாற்றத்துக்கான இளையோர் அணி முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணிக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது. பக்கம் 02

## விசேட சுற்றிவளைப்பில் 25,912 பேர் சிக்கினார்கள்

### 66 துப்பாக்கிகள் பறிமுதல்

கொழும்பு, ஜூன் 22

நாடளாவிய ரீதியில் கடந்த இரு வாரங்களாகப் பொலிஸார் முன்னெடுத்த விசேட சோதனை நடவடிக்கைகளின்போது பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் 25 ஆயிரத்து 912 சந்தேக நபர்கள் கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

இம்மாதம் 6 ஆம் திகதி காலை 6 மணிமுதல் நேற்று முன் தினம் சனிக்கிழமை நள்ளிரவு 12 மணி வரை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்தச் சந்தேகநபர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது பக்கம் 02

## தமிழர்களின் பிரதிநிதிகள் தமிழ்க் கூட்டமைப்பினரே!

### மாற்று அணியினரைத் தோற்கடியுங்கள் வடமராட்சி கிழக்கில் சுமந்திரன் சூளுரை



யாழ்ப்பாணம், ஜூன் 22

வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே. அதற்கான ஆணையை இம்முறையும் மேலும் வலுவுள்ளதாக வழங்குங்கள்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்ட வேட்பாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வடமராட்சி பக்கம் 02

## ராணுவம் – பொலிஸ் இணைந்து கெருடாவிலில் சுற்றிவளைப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 22

வல்வெட்டித்துறை கெருடாவில் – சீலாப்புலம் பகுதியில் நேற்று அதிகாலை முதல் சுமார் 3 மணித்தியாலங்கள் இராணுவம் மற்றும் பக்கம் 02

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து இப்போதுதான் செய்திகள் வெளியாகியுள்ளன.

நடந்தது இதுதான்:-

ஐ.ந. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள் தவிர்ந்து ஏனைய அங்கத்துவ நாடுகள் ஐந்தைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு நியூயோர்க்கில் நடந்தேறும் ஐ.நாவின் 74ஆவது கூட்டத் தொடருக்கு மத்தியில் கடந்த புதனும் வியாழனும் இடம்பெற்றது.

நான்கு பிரிவுகளில் ஐந்து நாடுகளைத் தெரிவு செய்ய வேண்டியிருந்தது.

அதன்படி -

★ ஆபிரிக்காவுக்கு - 01
★ ஆசிய,பசுபிக் பிரதேசங்களுக்கு -01
★ லத்தீன் அமெரிக்கப் பிரதேசம் -01
★ மேற்கு ஐரோப்பா மற்றும் ஏனைய நாடுகள் அணி (ஓஸானியா, வட அமெரிக்கா, மேற்கு ஆசிய போன்றவை) -02

ஆபிரிக்கா பிரிவில் இலங்கை கென்யாவுக்கு வாக்களித்தது. அந்த நாடே வென்றது.

ஆசிய பசுபிக் பிரதேசப் பிரிவில் இந்தியாவுக்கு இலங்கை வாக்களித்தது. இந்தியாவே வென்றது.

லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கான பிரிவில் மெக்ஸிக்கோ மட்டும் களத்தில் நின்றமையால் தேர்தலின்றியே அது தெரிவானது.

மேற்கு ஐரோப்பிய மற்றும் ஏனைய நாடுகளுக்கான பிரிவில் இரண்டு நாடுகளைத் தேர்வுசெய்வதற்காக அயர்லாந்து, நோர்வே, கனடா ஆகிய மூன்று நாடுகள் களத்தில் நின்றன. இந்த வாக்கெடுப்பில் இலங்கை கலந்து கொள்ளவில்லை. அதைப் பகிஷ்கரித்தது. இந்த வாக்கெடுப்பைப் புறக்கணித்த ஒரே நாடு இலங்கைதான்.

கடைசியாக தேர்தலில் அயர்லாந்தும் நோர்வேயும் வெற்றிபெற கனடா வாய்ப்பை இழந்தது.

வாக்களிப்பு இரகசிய வாக்கெடுப்பு முறை என்றாலும் நாடுகளின் நிலைப்பாடு ஓரளவு வெளியில் தோற்றுவது தவிர்க்க முடியாததாக இருந்தது.

மேற்படி தேர்தலைத் தாம் பகிஷ்கரித்தமைக்கான காரணத்தைத் தாம் அந்த மூன்று நாடுகளுக்கும் வெளிப்படையாகத் தெளிவுபடுத்தினர் என இலங்கை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடுமையான செய்தி அவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அவர்கள் எப்படி இதுகாறும் இலங்கை தொடர்பில் ஊடாடினார்கள்,

பக்கம் 11 »

## தமிழர்களின் பிரதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகிழக்கில் வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, முள்ளியான், வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய பகுதிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்ட வேட்பாளர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன் ஆகியோர் நேற்று மக்கள் சந்திப்புகளில் ஈடுபட்டனர். இதன்போது சுமந்திரன் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு,கிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஓர் அணியாக நிற்கின்றார்கள் - ஒரே நிலைப்பாட்டிலேயே இருக்கின்றார்கள் - அவர்களுக்கு மக்கள் கொடுத்துள்ள ஆணை சிதறுபட்டுள்ளதாக இல்லை - அந்த ஆணை ஒரே கொள்கையின் கீழ் மிகவும் பலமானது - வலுவானது என்பதைப் பொதுத்தேர்தலில் மக்கள் காட்ட வேண்டும். இதனூடாக ஓர் ஆசனத்துகாக ஆசைப்படுகின்ற மாற்று அணிகளை மக்கள் தோற்கடிக்க வேண்டும் - என்றார்.

இந்த மக்கள் சந்திப்புகளில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.சுகிர்தன், பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் அ.சா.அரியகுமார், ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி (முருதங்கேணி) அதிகாரி எஸ்.திரவியராசா மற்றும் பருத்தித்துறை பிரதேச சபையின் உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## முழுமையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாம் முன்னெடுத்த போராட்டத்தால் நாட்டில் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் என்பன பாதுகாக்கப்பட்டுள்ளன. 2015ஆம் ஆண்டு இந்தப் போராட்டத்தை ஆரம்பித்து ஆர்ப்பாட்டங்களை நடத்தி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 19 ஆவது அரசமைப்பு திருத்தம் மூலம் ஜனநாயக உரிமைகளை நாம் உறுதிப்படுத்தியுள்ளோம்.

தேர்தலை நடத்துவதற்கு ஆணைக்குழு இருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதியாக இருந்தாலும் அவரது செயற்பாடுகளைக்கூட இடைநிறுத்தக் கூடிய அதிகாரம் இந்த ஆணைக்குழுவுக்குக் காணப்படுகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியால் இவற்றுக்குப் பாரிய சவால் ஏற்பட்டுள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினரையும் தலைவரையும் பகிரங்கமாகத் தூற்றுகின்றனர். பொலிஸ் அதிகாரிகளுடன் செயற்பட இராணுவத்தினரை நியமிக்கின்றனர். பொலிஸார் புறந்தள்ளப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியைச் சந்திக்க வேண்டும் என்று கூறிய முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத் தலைவர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். ஸ்ரீலங்கன் விமான சேவையின் சிரேஷ்ட அதிகாரியாக சேவையாற்றியிருந்த ரஜீவ பிரகாஷ் ஜயவீர என்பவரின் சடலம் அண்மையில் சுதந்திர சதுக்கத்திற்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டது. அரச சேவை ஆணைக்குழுவின் நிலைமையும் இது போலவே உள்ளது. அவர்களை மாற்ற முடியாத சந்தர்ப்பங்களில் இராணுவத்தினர் அழைக்கப்படுகின்றனர். அவர்கள் திணைக்களங்களின் பிரதானிகளாக நியமிக்கப்படுகின்றனர். அவர்களிடமே முக்கிய பொறுப்புக்கள் அனைத்தும் ஒப்படைக்கப்படுகின்றன.

விசேட ஜனாதிபதி செயலணிகள் அமைக்கப்பட்டுள்ளன. எமது நாட்டிலுள்ள இராணுவத்தினர் உலகிலேயே சிறந்த வீரர்களாவர். போராட்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளுக்கே அவர்கள் பொருத்தமானவர்கள். அவற்றுடன் தொடர்புடைய பொறுப்புக்களை அவர்களிடம் கையளிக்கலாம்.

இலங்கையின் நிர்வாக சேவையை போருக்கு அனுப்பினால் முடிவுகள் வேறுமாதிரியாக இருக்கும். யாழ்ப்பாணத்துக்குப் போருக்கு அனுப்பினால் அது காலியிலேயே நிறைவுக்கு வரும். அதில் திறமை இல்லை. ஆனால், நாட்டை நிர்வகிப்பதற்கு பிரதேச செயலகங்கள், காணிகளுடன் தொடர்புடைய விடயங்களைச் செய்வதற்குத் திறமை அத்தியாவசியமானதாகும். இதனை இராணுவத்தினரால் செய்ய முடியாது. இதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உரிமைகளைப் பாதுகாக்க நாம் அனைவரும் ஒன்றிணைவோம் - என்றுள்ளது.

## ஒவ்வொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சுகாதார அலுவலர் கண்காணித்து உதவுவார் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

இந்த செயல்முறைக்கு ஒரு பொது சுகாதார பரிசோதகர் அல்லது ஒரு குடும்பநல சுகாதார உத்தியோகத்தர் நியமிக்கப்படுவார் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

ஓகஸ்ட் மாதம் பாதுகாப்பான தேர்தலை நடத்த சுகாதார அதிகாரிகள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர் என்று மருத்துவர் சமரவீர சுட்டிக்காட்டினார்.

கோரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களை அனைத்து தேர்தல் அதிகாரிகளும் பின்பற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காய்ச்சல் போன்ற அறிகுறிகள் உள்ளவர்கள் வாக்களிக்கும் பணியின் தொடக்கத்தில் வாக்குச் சாவடிகளுக்குள் நுழையக்கூடாது. அதற்கு பதிலாக வாக்குப்பதிவு காலத்தின் கடைசி மணி நேரத்தில் அவர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறது.

வாக்குச் சாவடிகளுக்குள் நுழைவதற்கு முன்பும், வாக்குச் சாவடிகளை விட்டு வெளியேறிய பின்னரும் கை கழுவுதல் மற்றும் பிற சுகாதார நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும். வாக்குச் சாவடிகளில் பொதுமக்களின் தொடர்புகளை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

வாக்குச் சாவடிகளுக்குள் நுழையும் போது பேனாவை எடுத்துச் செல்லுமாறு வாக்காளர்களிடம் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## விசேட சுற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தச் சுற்றிவளைப்புக்களின்போது போதைப்பொருளுடன் 6 ஆயிரத்து 420 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களுள் 3 ஆயிரத்து 551 பேரிடமிருந்து 5 கிலோ 472 கிராம் 941 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, 2 ஆயிரத்து 609 பேர் கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 217 கிலோ 474 கிராம் 883 மில்லிகிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே ஐஸ் போதைப்பொருளுடனும் 260 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 758 கிராம் 936 மில்லி கிராம் ஐஸ் மீட்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மதுபானத்துடன் 5574 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து ஒரு இலட்சத்து 79 ஆயிரத்து 782 லீற்றர் மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருந்த 52 பேரும், வெடிமருந்துகளை வைத்திருந்த அறுவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது 18 குழல் 12 ரகத் துப்பாக்கிகள் , 24 கல்கட்டஸ் ரக துப்பாக்கிகள், 18 ரிபிடர் ரக துப்பாக்கிகள், 5 புதிய வகை துப்பாக்கிகள், 36 தன்னியக்கத் தோட்டாக்கள், மூன்று வாள்கள், கத்தி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. 367 கிராம் வெடி மருந்து , 23 டெட்டனேட்டர்கள் மற்றும் 7 கைக்குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

இவை மாத்திரமின்றி பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 5 ஆயிரத்து 110 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்கூறிய குற்றச் செயல்களுக்குள் உள்ளடங்காத வேறுவகையான குற்றச் செயல்களை புரிந்தமை தொடர்பில் 8 ஆயிரத்து 750 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## வல்லிபுரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் வழிபாடுகளில் பல நூற்றுக் கணக்கான அடியவர்கள் கூடுவதாக எமக்கு முறைப்பாடு கிடைத்தது.

அதனடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட 50 அடியவர்கள் என்ற அனுமதியை மீறி பல நூற்றுக்கணக்கானோர் ஆலயத்தில் கூடியிருந்தனர்.

அத்தோடு ஆலயத்துக்கு வருகை தந்த அடியவர் ஒருவருக்கு காய்ச்சல் இருந்துள்ளது. அவருக்குப் பலர் அறிவுறுத்தல் வழங்கியும் சுவாமியைச் சுமந்துள்ளார். எனவே அவ்வாறு அவருடன் இணைந்து சுவாமியை சுமந்து சென்ற 14 பேரை 14 நாள்களுக்கு சுய தனிமைப்படுத்தலுக்குட்படுத்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் வடமராட்சி சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரனைத் தொடர்புகொண்டு கேட்டபோது, தமது இதுபற்றிய தகவல் அறிவிக்கப்படவில்லை என்று பதிலளித்தார்.

இதேவேளை, சுகாதாரத் துறையின் உயர்மட்டங்களுக்கு அறிவிக்கப்படாது பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் சில ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்ட தகவல் மத ரீதியான நடவடிக்கையாக கருதப்பட்டு சிக்கல்களை ஏற்படுத்தும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

(மற்றொரு விரிவான செய்தி 4ஆம் பக்கத்தில்)

## தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனியார் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கில் நீண்டகாலமாகத் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த இரண்டு மாகாணங்களும் தமிழ் மக்களின் சரித்திர பூமி. அதுதான் உண்மை. இதை நாம் விட்டுக்கொடுக்கவே மாட்டோம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அண்மையில் நான் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் வரலாற்று தகவல்களுடன் இதை நான் உறுதிப்படுத்தியுள்ளேன்.

எனவே, வடக்கு, கிழக்கில் தமிழர்கள் நிரந்தரமாக - நிம்மதியாக வாழக்கூடிய நிலைமைக்கு எதிராகப் பாரிய குடியேற்றங்களை ஏற்படுத்தி குடிப்பரம்பலை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமாக இருந்தால் சாத்வீக ரீதியில் தீவிரமாகப் போராடுவதற்குத் தயங்கப்போவதில்லை. சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் - என்றார்.

இதேவேளை, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முன்பை விடவும் கூடுதலான ஆதரவைத் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்குவார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சிப்பதைத் தவிர மாற்றுத் தீர்வுகளை மற்றைய கட்சிகள் கொண்டிருக்காமை காரணமாகவே தமிழ் மக்கள் தமக்குப் பெருவாரியாக வாக்களிப்பார் என நம்புவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## ராணுவம் - பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் இணைந்து சுற்றிவளைப்புத் தேடுதலை முன்னெடுத்தனர்.

இதன்போது நீதிமன்றப் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இருவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறை கொம்மாந்துறையில் கடந்த வாரம் கிணறு ஒன்றிலிருந்து 3 குண்டுகள் மற்றும் துப்பாக்கியும் மீட்கப்பட்டன.

இந்த நிலையில் வல்வெட்டித்துறை கெருடாவில் - சீலாப்புலம் பகுதியில் நேற்று அதிகாலை 4.30 மணி முதல் காலை 7.30 மணிவரை இராணுவம் மற்றும் பொலிஸாரால் சுற்றிவளைப்புத் தேடுதல் முன்னெடுக்கப்பட்டது.

ஊரணி இராணுவ முகாம் படையினரும் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்த இந்தத் தேடுதலில் சுமார் 40 வீடுகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இருவர் கைது செய்யப்பட்டனர் என்று வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

## இளையோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுக்குடியிருப்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட புதுக்குடியிருப்பு மாற்றத்துக்கான இளையோர் அணி 4 ஆசனங்களை பெற்றுக்கொண்டது. இந்த நிலையில் யாருக்கு தமது ஆதரவை வழங்குவது என்பது தொடர்பில் கலந்துரையாடி நேற்று வன்னி மாவட்ட தமிழ் மக்கள் தேசிய கூட்டணி வேட்பாளர் சிவசக்தி ஆனந்தனுடன் இணைந்து புதுக்குடியிருப்பில் ஊடகங்களை சந்தித்து தமது நிலைப்பாடுகளைத் தெரிவித்தனர்.

# சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் எண்ணிக்கை இம்முறை குறைவு!

(ந.லோகதயாளன்)

இம்முறை நாடாளுமன்றத் தேர்தல் கண்காணிப்பிற்காக் சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையினரே இலங்கை வரவுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

ஒகஸ்ட் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலைக் கண்காணிக்கும் நடவடிக்கைக்கு இலங்கை வரும் சர்வதேச பிரதிநிதிகள் கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கையாக 14 நாள்கள் தனிமைப் படுத்தலின் பின்பே கண்காணிப்புப் பணியில் ஈடு பட முடியும் எனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள்,தென் கொரிய அமைப்பு ஒன்றைச் சேர்ந்தோர், பொதுநலவாய அமைப்பு நாடுகளின் பிரதிநிதிகள் இந்தப் பணிக்காக வருகை தர இணக்கம் தெரிவித்தபோதும் அத்தரப்புகளில் இருந்து எத்தனை பேர் வருகை தருவர் என்பது இன்னும் உறுதி செய்யப்படவில்லை. மிகக் குறைந்த எண்ணிக்கையினரே வரக் கூடும் என பூர்வாங்க சமிஞைகள் தெரிவிக்கின்றன எனச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேநேரம் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த 80 பிரதிநிதிகள் வருகை தந்தமையும் இங்கே குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை முன் மதிலை முழுமையாக மூடி மறைத்து வேட்பாளர் சுவரொட்டி!





(ந.லோகதாயளன்)

யாழ்ப்பாணம் , ஜூன் - 22

தேர்தல் பரப்புரைச் சுவரொட்டிகள் மூலம் பாடசாலைச் சுவர்களையும் விட்டு வைக்காது அரசியல்வாதிகள் செயல்படுகின்றனர் என விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

பரந்தன் - முல்லை வீதியில் அமைந்துள்ள புனித அந்தோனியார் பாடசாலை முன் மதிலே இவ்வாறு தேர்தல் துண்டுப் பிரசுரம் கொண்டு மறைக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் அப்பகுதிப் பொது மக்களும் முன்பள்ளியினரும் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

தேர்தல் காலத்தில் துண்டுப் பிரசுரம் ஒட்டுவதும் வழமையாக இருப்பினும் ஓரிரு துண்டுப் பிரசுரம் ஒட்டுவது சகஜம்தான்.ஆனால் இவ்வாறு ஒரு மதிலை முழுமையாக மூடி விளம்பரத்தை ஒட்டுவது உள் நோக்கம் கொண்டதாக இருக்கலாம் எனக் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் என்றால் சுவரொட்டிகள் வரும். ஆனால், தேர்தலுக்கு இன்னும் ஆறு வாரங்கள் இருக்கும்போதே இந்த நிலைமை எனில் இன்னும் போகப் போக எப்படியாகுமோ என்று பல தரப்பினரும் மலைப்புத் தெரிவிக்கின்றனர்.

## கிளாலியில் இளைஞரின் மரணம் மனிதக் கொலை!

### சத்தேகத்திற்கு இடமேதுமில்லை என்கின்றது தமிழ்த் தேசியக் கட்சி



நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை கிளாலியில் இராணுவ சிப்பாய் ஒருவரால் மேற்ப்பட்ட துப்பாக்கி பிரயோகத்திற்கு இரையான இளைஞரின் மரணம் மனிதக் கொலை என்பதில் சத்தேகத்திற்கு இடமில்லை.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான ந.ரீகாந்த நேற்றுத் தாம் விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவித்திருக்கின்றார்.

அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

சட்டவிரோதமாக மண் ஏற்றிச் செல்ல முயன்ற சம்பவத்துடன் தொடர்புபட்டிருத்தார் என்ற சந்தேகத்தில் எவர் மீதும் துப்பாக்கி பிரயோகம் செய்வதற்கு எவருக்கும் அதிகாரம் கிடையாது.

மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த அந்த இளைஞர் இராணுவச் சிப்பாய்களால் வழிமறிக்கப்பட்ட போது தப்பிச் செல்ல முயற்சிக்கையில் துப்பாக்கி பிரயோகம் செய்யப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்த இளைஞரை துரத்திச் சென்று கைது செய்ய முயற்சி எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சம்பந்தப்பட்டஇராணுவச் சிப்பாய்க்கு அவரால் ஆபத்து ஏதும் ஏற்படக் கூடிய சூழ்நிலையும் இருந்திருக்கவில்லை.

இந்நிலையில் துப்பாக்கி பிரயோகம் தேவையற்றது. கண்மூடித்தனமாக அது நடத்தப்பட்டிருக்கின்றது.

இதே வேளையில் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்ற போது சுடப்பட்டவரின் உடல் அங்கே கைப்பற்றப்பட்டிருத்த உழவு இயந்திரத்துக்கு எப்படி வந்தது என்ற கேள்வியும் எழுந்திருக்கின்றது.

சம்பவத்தைத் திசை திருப்பி, உண்மையை மறைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கின்றது என்பது தெரிகின்றது.

இச்சம்பவம் தொடர்பில் பாரபட்சம் அற்றதும், முழுமையானதுமான புலன் விசாரணையை பொலீஸ் தரப்பு முன்னெடுத்து, சகல சாட்சியங்களையும் ஆதாரங்களையும் நீதிமன்றில் சமரப்பிக்க வேண்டும் என்று நாம் கோருகின்றோம்.

வட மாகாண பிரதிப் பொலீஸ் மாஅதிபர் உரிய நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் நாம் வேண்டிக்கொள்கின்றோம்.

படை வீரர்களின் கைகளில் உள்ள துப்பாக்கிகள் எந்தச் சூழ்நிலையிலும் துஷ்பிரயோகம் செய்யப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் விதத்தில், திட்டவட்டமான கட்டளைகளைப் பாதுகாப்பு அமைச்சு படைத்தரப்புகளுக்கு வழங்க முன்வர வேண்டும் என்றும் நாம் இச்சந்தர்ப்பத்தில் கோருகின்றோம். - என்று உள்ளது.

## ஜோன்ஸ்டன் - தயா ரத்நாயக்க மோதல் போக்கால் நெருக்கடி

கொழும்பு, ஜூன் 22

துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் துறைமுக அதிகார சபையின் தலைவர் லெப்டினட் ஜெனரல் தயா ரத்நாயக்க ஆகியோருக்கு இடையிலான மோதல், துறைமுக அதிகார சபையின் அன்றாட நடவடிக்கைகளுக்குத் தடையாக மாறியுள்ளது.

இருவருக்கும் இடையிலான மோதல் காரணமாக அமைச்சர் ஜோன்ஸ்டன் வழங்கும் உத்தியோக பூர்வமற்ற உத்தரவுகளை தயா ரத்நாயக்க கவனத்தில் கொள்வதில்லை எனக் கூறப்படுகிறது.

அத்துடன் துறைமுக அதிகார சபையின் தலைவராக தயா ரத்நாயக்க எடுக்கும் தீர்மானங்களுக்கு அமைச்சர் நேரடியான தடைகளை ஏற்படுத்தி வருகிறார்.

தயா ரத்நாயக்கவின் தீர்மானங்களுக்கு எதிராக துறைமுக ஊழியர்களின் ஒரு தரப்பினரை பயன்படுத்தி அமைச்சின் செயலாளருக்கு மனுக்கள் அனுப்பி வைக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக தயா ரத்நாயக்கவின் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதியாக தயா ரத்நாயக்க நேர்மையான அரச அதிகாரியாக அனைவரது நம்பிக்கைகளையும் வென்றெடுத்தவர் எனக் கூறப்படுகிறது.

அமைச்சருக்கும் துறைமுக அதிகார சபையின் தலைவருக்கும் இடையிலான இந்த மோதல் காரணமாக கொள்வனவுகள், கேள்வி மனு கோரல்கள் உட்பட பல நடவடிக்கைகளை மேற்கொள்வது ஊழியர்களுக்கு பெரும் தலையிடியாக மாறியுள்ளதாக துறைமுக அதிகார சபையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## யாழில் வைத்தியர்கள் வெற்றிடம்: 76 ஆனால் புதிய நியமனம் ஒன்றுதான்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் 76 வைத்தியர்களுக்கு வெற்றிடம் உள்ள நிலையில் இப்போதைக்கு ஒரேயொரு வைத்தியர் மட்டுமே புதிதாக நியமிக்கப்படுகிறார் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு போதனா வைத்தியசாலை உட்பட 45 வைத்தியசாலைகள் உள்ளன. இதில் 44 வைத்தியசாலைகள் மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்குகின்றன. இவ்வாறு காணப்படும் 44 வைத்தியசாலைகளுக்கும் 272 வைத்தியர்கள் தேவையான இடத்தில் தற்போது 196 வைத்தியர்களே பணியில் உள்ளனர்.

இவ்வாறு பணியில் உள்ள 196 வைத்தியர்களில தற்போது புத்தூரில் பணியாற்றும் வைத்தியர் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றலாகிச் செல்லும் நிலையில் அதற்குப் பதிலீடாகவே புதிய நியமனம் பெறும் ஒரு வைத்தியர் நியமிக்கப்படுகின்றார்.

இதேநேரம் விரைவில் புதிதாகப் பணிக்கு வரும் 390 வைத்தியர்கள் தேசிய ரீதியில் பணிக்கு நியமிக்கப்படவுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் காணப்படும் வெற்றிடங்களுக்கு அவர்களில் யாரும் நியமிக்கப்படவில்லை எனக் கூறப்பட்டது.

யாழ்ப்பாணக் குடா நாட்டில் இயங்கும் அனலைதீவு,எழுவைதீவு,புங் குடுதீவு ஆகிய வைத்தியசாலைகளுக்கு ஒரேயொரு ஓய்வு பெற்ற வைத்தியரும் தொட்டிலடி வைத்தியசாலையில் எவருமே இல்லாத நிலமையுமே காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இவையும் புரிந்த யதார்த்தவாதி

'யதார்த்தவாதி வெகுசன விரோதி' என்று நாம் கூறுவதுண்டு. யதார்த்தமாக, உண்மையாக, வெளிப்படையாகச் செயற்பட்டால் கெட்ட பெயர் சம்பாதிக்க வேண்டும், மக்களின் அதிருப்திக்கு உள்ளாக நேரிடும் என்பதுதான் இந்தப் பேச்சு மொழியின் அர்த்தம்.

ஆனால், இந்தப் பேச்சு மொழியையும் பொய்யாக்கிய ஜகதலப்பிரதாபன் ஒருவர் நம் மத்தியில் இருக்கின்றார்.

பலராலும் யதார்த்தவாதி என்று கூறப்படும் அவர் அதே நேரம் வெகுஜன ஆதரவு பெற்றவராகவும் இருக்கின்றார். அது எப்படி என்று கேட்டால், யதார்த்தவாதி என்பதே அவரது நடிப்பும், வெளிப்பகட்டும்தான். அதன் மூலம் ஒருபுறம் யதார்த்தவாதியாகவும் அதேநேரம் மறுபுறம் மக்கள் கவர்ச்சி உள்ளவராகவும் அவரால் செயற்பட முடிகின்றது.

அவரை முதன் முதலில் 'யதார்த்தவாதி' என்று நம்பிக் குறிப்பிட்டவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்தான்.

2005 நவம்பர் மூன்றாம் வாரத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வென்று அப்போதுதான் ஆட்சிப் பீடம் ஏறியிருந்தார் இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அடுத்த ஒரு வாரத்துக்குள் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வருடாந்தம் ஆற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க மாவீரர் தின உரைவந்தது. அப்போதுதான் – முதல் வாரத்தில்தான் – இலங்கையின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற மஹிந்த ராஜபக்ஷவைத் தமது உரையில் அவர் ஒரு 'யதார்த்தவாதி' என்று சுட்டினார் தலைவர் பிரபாகாரன்.

இலங்கை இனப்பிரச்சினையின் கள யதார்த்தப் புறநிலைகளைக் கவனத்தில் எடுத்து, புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காரியமாற்றுவார் என்று எதிர்பார்த்தே – அவரது வெளிப்பக்ட்டுப் பேச்சு மற்றும் நடிப்புச் செயற்பாடுகளை அர்த்தப்படுத்தியே – அப்படி அவரை விளித்தார் தலைவர் பிரபாகரன்.

ஆனால், பிறகு என்ன நடந்தது – மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிப் பீடம் எப்படி செயற்பட்டது – என்பவை எல்லாம் பரகசியம்.

வெளியில் யதார்த்தவாதியாகக் காட்டிக் கொண்டே அதி தீவிர கடும் போக்காளராகவும், முழுப் பேரினவாதியாகவும் காரியமாற்றினார் அவர்.

அதே 'யதார்த்தவாதி' பட்டத்தை இப்போது மீண்டும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்குக் சூட்ட முயலுகின்றார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம். அதே குதிரையில் அவரும் ஒரு தடவை ஏறிச் சறுக்கி விழப் போகின்றார் போலும்.

*"சிறுபான்மைச் சமூகங்களைப் புறக்கணித்து மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள முடியாது எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருப்பதன் மூலம் அவர் தமது அரசியல் முதிர்ச்சியையே வெளிப்படுத்தியிருக்கின்றார். அவரை விட வேறு சில கற்றுக்குட்டிகளே இனவாதப் போக்குடன் செயற்பட்டு அரசைத் தவறாக வழிநடத்துகின்றனர்.*

*"குறுகிய காலத்துக்குள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷச் யதார்த் தத்தை உணர்ந்துள்ளார். அது அவரது அரசியல் முதிர்ச்சியைக் காட்டுகின்றது"* – என்று கூறியிருக்கின்றார் ரவூப் ஹக்கீம்.

இலங்கை அரசியலில் கால் நூற்றாண்டுகளுக்கு மேல் முஸ்லிம் மக்கள் மத்தியில் அரசியலில் கோலேச்சும் ஹக்கீம் அத்துறையில் பழமும் தின்று கொட்டை போட்டவர்தான். உண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தொடர்பான அவரது இந்தக் கணிப்பீடு அவரின் அடி மனதில் இருந்து வந்திருக்குமானால் அவர் தப்புக் கணக்குப் போடுகின்றார் என்றே அர்த்தம்.

அப்படியில்லாமல், அதுவும் – ஹக்கீமின் அந்தக் கருத்து வெளிப்பாடும் – அரசியலுக்கான வெளிவேடப் பேச்சுத்தான் என்றால் – அதை விமர்சிக்காமல் விட்டு விடலாம்.

ஏனெனில், கடந்த பதினைந்து, இருபது ஆண்டுகால இலங்கையின் அரசியலில் யதார்த்தத்தை அதிகம் புரிந்து கொண்டவராக நடந்து கொள்பவர் மஹிந்தர்தான்.

அதிகாரத்தில் இருப்பதற்கும், நீடிப்பதற்கும், அதைத் தனது குடும்பக் சொத்தாகத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் பௌத்த சிங்களப் பேரினவாதம் என்ற மேலாண்மைப் போக்கை – இனவாதத்தை – பின்பற்றுவது ஒன்றே வசதியான, வாய்ப்பான, பிழைக்காத, சாத்தியமான ஒரே மார்க்கம் என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொண்ட யதார்த்தவாதி அவர்தான்.

# வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் நேற்றுப் பகல் சுகாதார அதிகாரிகள் அதிரடி நடவடிக்கை!

* கோயிலுக்குள் 14 நாள்கள் நுழையத் தடை
* மூன்று பக்தர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்
* சாமி தூக்கியவர்களைத் தேடி நடவடிக்கை





**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்.பருத்துறை – வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் சுகாதார நடைமுறைகளை மீறி அதிக பொதுமக்கள் கூடிய நிலையில், ஆலயத்தை முற்றுகையிட்ட பருத்துறை சுகாதாரசேவைகள் வைத்திய அதிகாரி பணிமனையை சேர்ந்த அதிகாரிகள் குழாம் அடுத்த 14 நாள்களுக்கு கோவிலுக்குள் வெளியார் நுழையத் தடைவிதித்துள்ளனர்.

சாமி காவிய ஒருவருக்கு காய்ச்சல் இருந்த நிலையில் அவருடன் சேர்ந்த சாமி காவிய 3 பேரை தனிமைப்படுத்தவும், ஆலயத்திலிருந்து நைஸாக வெளியேறியோர் எனக் கருதப்படுவோரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருபவை வருமாறு:–

கடந்த ஒரு வாரத்திற்கு முன்னர் ஆலயத்திற்குச் சென்ற சுகாதாரப் பிரிவினர் ஆலயத்திற்குள் சுகாதார நடைமுறைகளை மீறி அதிக எண்ணிக்கையான மக்கள் கூடுகின்றமையைத் தவிர்க்குமாறும், சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறும், முக கவசம் அணிவதைக் கட்டாயமாக்குமாறும் கூறியிருக்கின்றனர்.

இதனையடுத்து நேற்றுவர்கள் ஆலயத்திற்குச் சென்றபோது அங்கு அதிக எண்ணிக்கையான மக்கள் கூடியிருந்தமையுடன், சுகாதார நடைமுறைகள் எவையும் பின்பற்றப்படாமையும் அறியப்பட்டுள்ளது.

இதேபோல் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்தில் சேவையாற்றும் ஒருவர் கடந்த சில நாள்களாகக் காய்ச்சல் காரணமாக விடுமுறை அறிவித்திருந்த நிலையில் அவரும் ஆலயத்தில் நின்று சாமி காவியுள்ளார். இதனைடுத்து சாமி காவியவர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்த நிலையில் 3 பேர் மட்டுமே அங்கு நின்றமையுடன் மிகுதி அனைவரும் ஆலயத்திலிருந்து வெளியேறியிருந்தனர். இதனையடுத்து 3 பேரையும் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆலயத்திற்குள் 14 நாள்களுக்கு பொதுமக்கள் நுழையத் தடைவிதிக்கப்பட்டு தடை உத்தரவு ஆலய சுவரில் ஒட்டப்பட்டது. பூசகர் மற்றும் அவருக்குத் துணை புரிபவர்கள் என 5 பேர் மட்டும் ஆலயத்தில் பூசை நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும் காய்சலால் பாதிக்கப்பட்டவருடன் சாமி காவிவிட்டு வெளியேறியவர்களை

பொலிஸாரின் ஒத்துழைப்புடன் தேடி பிடித்து தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது.

# நீர்கொழும்பு சிறையில் இருந்தவாறு போதைபொருள் கடத்தியமை அம்பலம்

## சார்ஜண்ட் கைது; அவரின் மனைவி மைத்துனரும் கஞ்சாவுடன் சிக்கினர்

சீதுவை, துறைமுக நிலைய வீதியில், ஹெரோயின் மற்றும் கஞ்சாவுடன் கைதான பொலிஸ் சார்ஜண்ட் ஒருவரிடம் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில், நீர்கொழும்பு சிறைச்சாலையிலிருந்தவாறு போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கையை மேற்கொண்ட சிறைக் கைதி ஒருவரின் மனைவி மற்றும் அவரது சகோதரரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீர்கொழும்பு சிறைச்சலையிலிருந்து ஹெரோயின் மற்றும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள் கடத்தல் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் மேல் மாகாண புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய, மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், குறித்த பொலிஸ் சார்ஜண்ட் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்க விமானப்படை முகாமில் பணியாற்றும் குறித்த சார்ஜண்ட், நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் துறைமுக நிலைய வீதியில் வைத்து, 100 கிராம் ஹெரோயின் மற்றும் 400 கிராம் கேரள கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டார்.

கைதான கட்டுநாயக்கவைச் சேர்ந்த 40 வயதான குறித்த சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணையில், நீர்கொழும்பு சிறைச்சாலையில் இருந்து இக்கடத்தல் நடவடிக்கையை மேற்கொள்ளும் கைதி ஒருவரின் வீட்டிலிருந்து 1.830 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் கைதியின் மனைவி மற்றும் 455 கிராம் கேரள கஞ்சாவுடன் கைதியின் மைத்துனர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறையில் இருந்து இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நபர், குறித்த சந்தேகநபர் மற்றும் அவரது மனைவியுடன் கையடக்க தொலைபேசி மூலம் தொடர்ச்சியாக அழைப்பு விடுப்பதாகவும், அவரின் வழிகாட்டல்களுக்கு அமைய, பொலிஸ் சார்ஜண்ட் உள்ளிட்ட இச்சந்தேகநபர்கள் குறித்த போதைப்பொருளை பல்வேறு நபர்களிடம் கொண்டு சேர்ப்பதாகவும், அதில் கிடைக்கும் பணத்தை குறித்த கைதியின் மனைவியின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுவதாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட பொலிஸ் சார்ஜண்ட் சீதுவை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளமையோடு, அவரை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏனைய இரு சந்தேகநபர்களும் மினுவாங்கொடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளமையோடு, அவர்கள் மினுவாங்கொடை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இது தொடர்பில் சீதுவை மற்றும் மினுவாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(மற்றொரு செய்தி 5ஆம் பக்கத்தில்)

# சுகாதாரப் பரிசோதகரின் மீது யாழ். அத்தியடியில் தாக்குதல்

(ந.லோகதயாளன், எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்.நகர் பகுதியில் கழிவுப்பொருள்களை கொட்டுவதற்காக வந்த நபரொருவர் அதனைத் தடுக்க முற்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகரை தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், ஸ்டான்லி வீதி, அத்தியடிச் சந்திப் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், தாக்குதலில் காயமடைந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அப்பகுதியில் அதிகளவில் குப்பை கொட்டப்படுவதால் அதற்கு அண்மித்த இடங்களில் உள்ளவர்கள் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் அந்த இடத்தில் குப்பைகளை இட வேண்டாம் என்று யாழ்.மாநகர சபையினால் அறிவித்தல் பலகை வைக்கப்பட்டுள்ள நிலையில்,பொறுப்பற்ற விதத்தில் அதிகளவானவர்கள் அங்கு தினமும் குப்பைகளை கொட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அறிவித்தலை மீறிக் குப்பை கொட்டுபவர்கள் இனங்காணப்பட்டு அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யும் நடவடிக்கையை அப்பகுதிக்கு பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதுவரை அவரால் 70 ற்கும் மேற்பட்டவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் வந்தவர் அங்கு குப்பைகளைக் கொட்ட முயற்சித்தார். இதனை தடுத்து அவர் மீது வழக்கு பதிவு செய்ய முற்பட்டபோதே பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தாக்கப்பட்டுள்ளார்.

அவரது மோட்டார் சைக்கிள் இலக்கத்தின் அடிப்படையில் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# விமானப்படை அதிகாரி போதைப்பொருளுடன் கைது

கொழும்பு, ஜூன் 22

கட்டுநாயக்க விமானப்படை முகாமில் கடமையாற்றி வரும் விமானப்படை சார்ஜன்ட் ஒருவர் 100 கிராம் ஹெரோயின் மற்றும் 400 கிராம் கேரளா கஞ்சாவுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இந்த நபர் வழங்கிய தகவலுக்கு அமைய நீர்கொழும்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போதைப்பொருள் விற்பனையைக் கையாண்டு வந்த கைதி மற்றும் அவரது மனைவியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட கைதியின் வீட்டில் இருந்து சுமார் 2 கிலோ கிராம் கஞ்சாவையும் தாம் கைப்பற்றினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பணியகத்தின் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# வெளிநாடுகளில் சிக்கியிருந்த 594 பேர் நேற்று நாடு திரும்பல்

கொழும்பு, ஜூன் 22

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாடு திரும்ப முடியாமல் வெளிநாடுகளில் சிக்கிய மாணவர்கள் மற்றும் தொழில் வாய்ப்புக்காகச் சென்ற சுமார் 594 பேர் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

அந்தவகையில் நேற்று அதிகாலை தன்சானியாவின், தாருஸ்ஸலாம் நகரிலிருந்து வந்த ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான யு.எல். 1710 எனும் விசேட விமானத்தில் 289 இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மடகஸ்கார், மொசாம்பிக், உகண்டா, கென்யா,ருவாண்டா ஆகிய ஆபிரிக்க நாடுகளில் ஹோட்டல் துறைகளில் தொழில் புரிந்தவர்களே இவ்வாறு நாடு திரும்பினர். இவர்கள் அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதேவேளை, ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான மற்றுமொரு விசேட விமானம் மூலம் மாலைதீவிலிருந்து 255 பேரும், ஆஸ்திரேலியாவின் சிட்டினியிலிருந்து மற்றுமொரு விமானம் மூலம் 50 பேரும் என சுமார் 594 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

# நூற்றுக்கணக்கான பனைகள் தீக்கிரை!

மன்னார், ஜூன் 22

மன்னார் தேசிய நீர் வழுங்கல் வடிகாலமைப்புச் சபைக்குச் சொந்தமான தரவன் கோட்டைப் பகுதியில் அமைந்துள்ள பனை மரக் காட்டில் நேற்று முன்தினம் காலை ஏற்பட்ட தீ விபத்தில், நூற்றுக்கணக்கான பனை மரங்கள் தீயில் எரிந்தன.

சம்பவ இடத்திற்கு விரைந்த மன்னார் நகர சபையின் தீயணைப்புத் துறையினரின் உதவியுடன் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை, மன்னார் மாவட்ட அனர்த்த முகா மைத்துவ நிலையம் உடனடியாக வவுனியாவிலிருந்து தீயணைப்பு வாகனத்தை அழைத்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

எனினும், நூற்றுக்கணக்கான பனை மரங்கள் தீயில் எரிந்துள்ள நிலையில் தீ ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை தெரியவில்லை.

இந்நிலையில், மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பில் வாக்கு எண்ணும்பணி ஒத்திகை

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்குச் சீட்டுக்கள் எண்ணும் பரீட்சார்த்த ஒத்திகை நேற்று முன் தினம் மட்டக்களப்பு மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் நடைபெற்றது.

தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் சுகாதார அமைச்சும் இணைந்து சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிமுறை அறிவுறுத்தலுக்கு அமைய எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஒத்திகை நிகழ்வுகளை நாடாளாவிய ரீதியில் நடத்தி வருகின்றது.

அதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான தேர்தல்கள் ஒத்திகை நிகழ்வுகள் நடைபெற்று வருகின்ற நிலையில் கடந்த 14 ஆம் திகதி வாக்களிக்கும் ஒத்திகை இடம்பெற்றதைத் தொடர்ந்து கடந்த சனிக்கிழமை வாக்குச்சீட்டுக்கள் எண்ணும் ஒத்திகை நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.



மாவட்ட அரச அதிபரும், மாவட்ட தேர்தல்கள் தெரிவத்தாட்சி அலுவலகருமான கலாமதி பத்மராஜா தலைமையில் மாவட்ட தேர்தல்கள் அலுவலக உதவி தேர்தல் ஆணையாளர் ஆர்.சசீலன் தலைமையில் நடைபெற்ற வாக்குச் சீட்டுக்கள் எண்ணும் ஒத்திகை நிகழ்வில் 20 உத்தியோகத்தர்களை கடமைகளுக்கு அமர்த்தி சுமார் 8000 ஆயிரம் வாக்குச்சீட்டுக்கள் எண்ணும் பரீட்சார்த்த ஒத்திகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

# 95ஆயிரத்து 87பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை

கொழும்பு, ஜூன் 22

இலங்கையில் இதுவரை 95ஆயிரத்து 87பேருக்கு கொரோனாவை கண்டறியும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் மாத்திரம் 827 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது. எனினும் நேற்று எந்தவொரு கொரோனா தொற்றாளரும் கண்டறியப்படவில்லை.

# ஐ.தே. கட்சியின் பிரதித் தலைவர் பதவியைக் கைப்பற்றப் போட்டி

சஜித் பிரேமதாஸ நீக்கப்பட்டமையை அடுத்து வெற்றிடமாகியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவியைக் கைப்பற்றுவதற்காக அந்தக் கட்சியின் உப தலைவர் ரவி கருணாநாயக்க மற்றும் சிரேஷ்ட உப தவிசாளர் தயா கமகே ஆகியோருக்கு இடையில் கடும் போட்டி ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவியை தயா கமகேவுக்கு வழங்க அந்தக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க விரும்புகின்றார். அந்த பதவியைக் கைப்பற்ற ரவி கருணாநாயக்க கடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சியின் உட்தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

கடந்த பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்ட தயா கமகே இம்முறை கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுகிறார். ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைக்கு அமையவே அவர் கொழும்பில் போட்டியிடுகின்றார். அவருக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஹோமாகம தொகுதி அமைப்பாளர் பதவியும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கட்சியின் பிரதித் தலைவர் பதவியைக் கைப்பற்று போட்டியை ரவி கருணாநாயக்க கைவிடாது தொடர்ந்து வருகிறார் என ஐக்கிய தேசியக் கட்சியின் தகவல்கள் கூறுகின்றன.

காலைக்கதிர்
Kalaikkathir







சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு இந்திய - சீன எல்லைப் பிரதேசமான லடாக்கில் உறைபனியைப் பொருட்படுத்தாமல் இந்தியச் சிப்பாய்கள் நேற்று யோகா செய்தனர்.

# உணர்ச்சியைத் தூண்டும் விதமாக பேச வேண்டாம்

## மோடி மீது கமல் காட்டம்



கடந்த ஆறு ஆண்டுகளில் எந்த ஒரு கேள்விக்கும், சரியான பதில் அளிக்காமல், உணர்ச்சிகரமாகப் பதிலளிப்பதை வாடிக்கையாகக் கொண்டிருக்கிறீர்கள் என்று இந்தியப் பிரதமர் மோடியைக் கடுமையாகச் சாடியுள்ளார் நடிகர் கமல்ஹாசன்.

இது குறித்துக் கமல் மேலும் குறிப்பிடுகையில் –

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பிரதமர் கூறியிருக்கும் கருத்துகள் ஜுன் 16 –17ஆம் திகதிளில், இராணுவ அதிகாரிகளும், வெளியுறவுத் துறை அமைச்சரின் அறிக்கைகளிலிருந்து முரண்பட்டிருக்கிறது. பிரதமர் பேசி முடித்து 10 மணி நேரம் கழித்து பிரதமர் அலுவலகம் அவர் அப்படிச் சொல்லவில்லை, என விளக்கவுரை கொடுத்துக் கொண்டிருக்கிறது. தெளிவான சிந்தனை தேவைப்படும் போதெல்லாம், உணர்வுகளைத் தூண்டிவிட்டுத் தப்பிக்க முயல்வதை பிரதமரும், அவரது சகாக்களும் நிறுத்த வேண்டும். இது ஒருமுறை அல்ல, கடந்த ஆறு ஆண்டுகளில் எந்த ஒரு கேள்விக்கும், சரியான பதில் அளிக்காமல், உணர்ச்சிகரமாகப் பதிலளிப்பதை வாடிக்கையாகக் கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு முறையும் கேள்வி கேட்பவர்களை தேசத்திற்கே விரோதியைப் போல் ஒரு பிம்பத்தை கட்டமைத்திருக்கிறீர்கள்.

ஆனால் அது ஜனநாயகத்தின் அடிப்படை என்பதை என்றும் மறந்துவிடாதீர்கள். எதிலும் மக்களின் நன்மைக்கான திட்டம் இல்லாமல், உணர்வுகளைத் தூண்டும் உங்கள் பேச்சுதான் இந்தச் சூழ்நிலையிலும் நடக்கிறது என்றார்.

# கிண்டல் அடித்தவர் கைது செய்யப்பட்டார் இந்தியாவில் அதிரடி

கிழக்கு லடாக்கில் சீன ராணுவத்துடன் நடந்த மோதல் விவகாரத்தில் பிரதமர் மோடியையும், இந்திய இராணுவத்தையும் கிண்டல் செய்து ஒலிப்பதிவை வெளியிட்ட லடாக்கின், ஜுகர் தொகுதிக் கவுன்சிலர் ஜாகீர் ஹுசேன் கைது செய்யப்பட்டார்.

அவரைப் பதவி நீக்கம் செய்தது லடாக் சுயாட்சி மலை மேம்பாட்டுக் கவுன்சில். 'வட்ஸ் அப்'பில் வெளியான அவருடைய ஒலிப்பதிவையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

நேற்று இரவு கார்கில் நகரில் இருக்கும் அவரது வீட்டைச் சோதனையிட்ட பொலிஸார் அவர் சர்ச்சைக்குரிய வகையில் பேசிய ஒலிப்பதிவின் மூலப் பிரதியைப் பறிமுதல் செய்து அவரை அழைத்துச் சென்றனர்.

# எல்லையில் குவிகிறது இராணுவம்!

இந்திய – சீனா எல்லையில் இந்திய இராணுவத்துக்கு முழுமையான அதிகாரம் அளிக்கப்பட்டு இராணுவம் குவிக்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் முப்படைத்தளபதிகளுடன் ஆலோசனை நடத்திய பின்னர் எல்லைப் பகுதியில் சீனாவின் அத்துமீறல், ஆவேசமான போக்குக்குப் பதிலடி கொடுக்க இராணுவத்துக்கு முழுமையான சுதந்திரம் வழங்க அனுமதியளித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், இந்தியாவின் நில எல்லைப் பகுதிகளிலும், வான் வெளி மற்றும் கடற்பகுதிகளிலும் சீனாவின் ஊடுருவல் ஏதும் இருக்கிறதா என்பது கண்காணிக்கப்பட்டு வருகிறது. சீன ராணுவம் எந்தவிதமான அத்துமீறலில் ஈடுபட்டாலும் தகுந்த பதிலடி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது என்று இந்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



# சீனா தரப்பில் இருமடங்கு சாவு இந்திய அமைச்சர் தெரிவிப்பு



இந்தியா – சீனா சிப்பாய்களுக்கிடையே எல்லையில் நடந்த மோதலில் சீனா தரப்பில் 40 சிப்பாய்கள் சாவடைந்திருப்பார்கள் என்று இந்தியாவின் வீதிகள் மற்றும் போக்குவரத்து அமைச்சர் வி.கே.சிங் தெரிவித்தார். எல்லைப் பகுதியில் இவ்விரு இராணுவச் சிப்பாய்களுக்கிடையிலும் நடந்த கைகலப்பில் 20 இந்தியச்சிப்பாய்கள் சாவடைந்தனர்.

76 சிப்பாய்கள் காயமடைந்தனர் என்று இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட நிலையில் இதில் ஏற்பட்ட இழப்புகள் குறித்து சீனா தரப்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இந்த நிலையில், எங்கள் (இந்திய) தரப்பில் 20 பேர் உயிரிழந்திருந்தால், அவர்களின் (சீனா) தரப்பில் இரண்டு மடங்கு உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கும் என்று அமைச்சர் வி.கே. சிங் தெரிவித்தார்.

எந்தவொரு ஆதாரமும் இல்லாமல் கருத்துரைத்த அவர் 1962 ஆம் ஆண்டு இந்தியாவுடனான மோதல் உட்பட எந்தவொரு போர் உயிரிழப்புகளையும் சீனா வரலாற்றுரீதியாக ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறினார். இவரது கருத்துக்குப் பதில் அளிப்பதற்கு இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் பாரத் பூன் பாபு மறுத்துள்ளார்.

# ரெம்டிசிவிர் தயாரிப்புக்கு அனுமதி

இந்தியாவில் கொரோனா நோய் எதிர்ப்பு மருந்தான ரெம்டிசிவிர் மருந்தை உற்பத்தி செய்ய சிப்லா மற்றும் ஹெட்ரோ ஆகிய இரண்டு முன்னணி மருந்து நிறுவனங்களுக்கு இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு ஆணையகம் அனுமதி வழங்கியுள்ளது. மிக அவசர தேவைக்காக மட்டும் இந்த கொரோனா எதிர்ப்பு மருந்தைப் பயன்படுத்த இந்திய அரசு அனுமதியளித்துள்ளது. இதனால் விரைவில் இந்த மருந்துக்கான உற்பத்தி ஆரம்பிக்கப்படவுள்ளது. கொவிட் – 19 நோயாளிகளுக்குப் பயன்படுத்தும் அளவுக்கு இந்த மருந்து பாதுகாப்பானதாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட, கடும் பாதிப்புக்குள்ளான கொரோனா நோயாளிகளுக்கு அவசரநிலையில் கட்டுப்படுத்தப்பட்ட முறையில் இந்த மருந்தை அளிக்கலாம் என்று இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டு ஆணையகம் தெரிவித்துள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் உள்ள மருந்து தயாரிப்பு நிறுவனங்களிடம் ரெம்டிசிவிர் மருந்தை உற்பத்தி செய்வதற்கான ஒப்பந்தத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த கைலீட் எனும் மருந்து தயாரிப்பு நிறுவனம் கடந்த மே மாதம் ஒப்பந்தம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### ரெம்டிசிவிர்

ரெம்டிசிவிர் இன்னமும் பரிசோதனையில் இருக்கிற ஒரு மருந்து. கொவிட் – 19 நோய் கடுமையாகப் பரவி வரும் நிலையில், இந்நோய் தாக்கியவர்களுக்கு அவசரகாலத் தேவைக்கு கட்டுப்படுத்தப்பட்ட முறையில் இந்த மருந்தினை அளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒப்புதல் படிவத்தை குறிப்பிட்ட முறையில் நோயாளி நிரப்பிய பிறகே மருத்துவர்கள் இந்த மருந்தினைப் பயன்படுத்த முடியும். இந்தியாவில் இந்த அளவுக்குக் கட்டுப்பாடுகளோடு பயன்படுத்தப்படும் முதல் மருந்து இதுதான்.



# மாலைதீவில் இருந்து புறப்பட்டது இந்தியர்களை ஏற்றிய கப்பல்

மாலைதீவில் இருந்து 250 இந்தியர்களை ஏற்றிக்கொண்டு 'ஐ.என்.எஸ். அய்ராவத்' என்ற கப்பல் நேற்றுப் பிற்பகல் இந்தியாவின் தூத்துக்குடி நோக்கித் தனது பயணத்தை ஆரம்பித்தது. இந்தக் கப்பல் நாளை அதிகாலை தூத்துக்குடி துறைமுகத்தைச் சென்றடையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கிய இந்தியர்களை 'ஒப்பிரேசன் சமுத்திர சேது' திட்டத்தின் கீழ் இந்தியா அழைத்துச் செல்லப்படுகின்றனர். அவ்வாறு இலங்கையில் இருந்து இம்மாதம் 2ஆம் திகதி 713 இந்தியர்களும், மாலை தீவில் இருந்து இம்மாதம் 7ஆம் திகதி 700 இந்தியர்களும், இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான 'ஐ.என்.எஸ். ஜலஸ்வா' கப்பல் மூலம் தூத்துக்குடி துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இதன் தொடர்ச்சியாகவே மாலைதீவில் சிக்கித் தவிக்கும் மேலும் 250 இந்தியர்கள் 'ஐ.என்.எஸ் அய்ராவத்' என்ற கடற்படைக் கப்பல் மூலம் தூத்துக்குடித் துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

# சீனாவின் சட்டத்துக்கு எதிராக மௌனித்தது ஹொங்கொங்!

சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங் கொங் மீது புதிய பாதுகாப்புச் சட்டத்தைச் சீனா கொண்டுவந்துள்ள நிலையில், சீனாவின் அடக்கு முறைகளுக்கு எதிராக அங்கு போராடி வந்தவர்கள் தற்போது ஒன்றுகூடி இதற்கு எதிராக அணி திரள்வ தற்குப் பின்னடிக்கிறார்கள் என்று பன்னாட்டு ஊடகங் கள் செய்தி வெளியிட்டன.

தற்போது சீனா கொண்டுவந்துள்ள தேசிய பாது காப்புச் சட்டத்துக்கு எதிராக வேலைநிறுத்தங்கள், போராட்டங்களை நடத்துவதற்குப் போதுமான ஆதர வைப் பெற ஜனநாயக சார்பு தொழிலாளர் சங்கங் களும் ஹொங்கொங்கின் மாணவர் குழுவும் தவறி விட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. ஒரு வருடமாக அங்கு நீடித்த வன்முறை அமைதியின்மைக்குப் பின்னர் தற்போது கைது செய்யப்படுவதற்கான




அதிக ஆபத்துகள் தென்படுவதால் சீன எதிர்ப்பு ஆர்ப் பாட்டங்கள் வேகத்தை இழந்துள்ளன என்று தெரி விக்கப்படுகிறது.

**பின்னணி**

சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங் கொகில் இதுவரைகாலமும் நிலவிய தன்னாட்சி சுதந் திரம் முடிவுக்கு வரவிருக்கிறது. ஹொங்கொங்கின் சட்ட மற்றும் ஆட்சியமைப்பில் மாற்றங்கள் செய்வ தற்கான தேசிய பாதுகாப்புத் தீர்மானம் சீனா நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத் தில் பிரிவினைவாத மற்றும் தேசவிரோதச் செயல்க ளைத் தடுப்பதற்காகக் கூடுதல் சட்ட ஏற்பாடுகள் பரிந் துரைக்கப்பட்டுள்ளன.

மேலும், வெளிநாட்டுத் தலையீடுகள், ஹொங் கொங் நகரில் பயங்கரவாதத்தில் ஈடுபடுதல் ஆகிய வற்றுக்கு எதிரான அம்சங்களும் இடம் பெற்றுள்ளன. இந்தத் தீர்மானம் சீன நாடாளுமன்றத்தில் நிறைவேற் றப்பட்டதால் சட்டமாக உருவெடுத்துள்ளது.



## அதிபரை விலகக் கோரி மாலி மக்கள் போராட்டம்!

ஆபிரிக்க நாடான மாலியில் அந்த நாட்டு அதிபரைப் பதவி விலக வலியுறுத்தி மிகப்பெரும் போராட்டம் நடைபெற்றது. மாலியின் அதி பராக இப்ராகிம் பவுபக்கர் கெய்டா (வயது 75) 2013ஆம் ஆண்டு முதல் அதிபர் பதவி வகித்து வருகிறார்.

அந்த நாட்டில் மத அடிப்படையிலான ஆயுததாரிகளாலும், உள் ளூர் இனக் குழுக்களாலும் அடிக்கடி வன்முறைகள் அரங்கேறி அமைதியற்ற சூழல் நிலவி வருகிறது. அங்கு அரசியல், பொருளாதார சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றன. அதிபர் பதவி விலகவும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இதற்கிடையே எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் சேர்ந்து புதிய அரசு அமைக்க அதிபர் இப்ராகிம் பவுபக்கர் கெய்டா முன்வந்துள் ளார். இதையொட்டி இருதரப்பு பேச்சு வார்த்தையும் நடைபெற்றது. ஆனாலும், நேற்று முன்தினம் தலைநகர் பமாகோவில் உள்ள சுதந்திர சதுக்கத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து, அதிபர் பதவி விலக வலியுறுத்திப் போராட்டம் நடத்தினர். அவர்கள் அரசுக்கு எதிரான வாசகங்கள் கொண்ட கோரிக்கை அட்டைகளை யும், பதாகைகளையும் ஏந்தி இருந்தனர்.

## நைஜீரியாவில் வான்தாக்குதல் ஆயுததாரிகள் கொன்று குவிப்பு

நஜீரியாவில் போர் விமா னங்கள் நடத்திய வான்தாக் குதலில் போகோஹரம் ஆயுத தாரிகளின் கட்டளை மையம் அழிக்கப்பட்டது.

அங்கிருந்த ஆயுததாரிகள் அனைவரும் கொல்லப்பட்ட னர். நைஜீரியாவில் ஆதிக்கம் செலுத்தி வருகின்ற போகோ ஹரம் ஆயுததாரிகளைக் குறி வைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் நைஜீரியாவின் வட கிழக்குப்பகுதியிலுள்ள போர்னா மாகாணத்தின் சம்பீசா வனப் பகுதியில் அடங்கியுள்ள யுவே என்ற இடத்தில் நடத்தப்பட்டது.



நைஜீரிய இராணுவம் போர் விமானங்களை கொண்டு அந்தப் பகுதியை முற்றுகையிட்டுக் கடுமையான வான்தாக்குதல்களை நடத்தி யதாவும் அந்தத் தாக்குதல்களில் போகோஹ ரம் ஆயுததாரிகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்ட தாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் கூறு கின்றன.

## இரண்டாவது அலை வைரஸின் மரபணுவை வழங்கியது சீனா



சீனாவின் தலை நகர் பீஜிங்கில் 2 ஆவது அலையாக மேலும் 34 பேருக் குக் கொரோனாத் தொற்று பரவியுள்ள நிலையில், அதற்குரிய கொரோனா மரபணு வரிசையை உலக சுகாதார நிறுவனத்தி டம் சீனா ஒப்படைத் தது.

பீஜிங்கின் ஜின்பாடி சந்தையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள வைரஸ், ஐரோப்பாவில் இருந்து வந்தது எனச்சீன விஞ்ஞானிகள் கண்டறிந் துள்ளனர். உறைந்த உணவில் (சால்மன் மீன்கள்) சீல் வைத்து குளிர்ந்த மற்றும் ஈரமான நிலையில் பாதுகாத்து வைக்கப்பட்டதில் இருந்த கொரோனா வைரஸ் ஐரோப்பாவில் இருந்து வந்துள்ளது எனத் தெரிவித் தனர்.

பீஜிங் நகர ஜின்பாடி சந்தை யில் இருந்து பரவத்தொடங்கிய கொரோனா வைரசின் மரபணு வரிசையை உலக சுகாதார நிறுவ னத்திடம் சீன நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் வழங்கி உள்ளது என தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதை உலக சுகாதார நிறுவ னம் ஆராய்ந்து, இந்த வைரசின் தோற்றம் பற்றிய தனது கருத்தைத் தெரிவிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## மரினா ஆழியின் ஆழத்தை அடைந்தார் 12ஆவது நபர்!




சிறந்த கடல் ஆய்வாளர் என்று அறியப்படுகின்ற டான் வால்ஷ்ரீன் மகன் கெல்லி வால்; என்பவர் பசுபிக் சமுத்திரத்தி லுள்ள மிக ஆழமான அகழி யான மரினாவின் ஆழத்தைத் தொட்டார்.

11கிலோ மீற்றர் ஆழமுடைய மரினா அகழியின் அடியில் இறங்கிய அவர் அங்கு 4 மணி நேரம்வரை செலவிட்டார் என்று கூறப்படுகிறது. அவருடைய தந்தை இதற்கு முன்னர் மரினா அகழியின் ஆழத்துக்குச்சென்று திரும்பியிருந்த நிலையில், கிட் டத்தட்ட 60 ஆண்டுகளுக்குப் பிறகு மகனான இவர் சென்று திரும்பியிருக்கிறார்.

மரினா அகழியின் ஆழத் துக்குச் சென்று திரும்பிய 12 ஆவது நபராக இவர் அடையா ளப் படுத்தப்பட்டுள்ளார். கடந்த சனிக்கிழமையன்று இவர் மரி னாவின் ஆழமான 10ஆயிரத்து 925 மீற்றர் ஆழத்தை 12 மணித் தியாலங்களில் எட்டினார். மேற் பரப்புக்குத் திரும்பிய பின்னர் 'மிகவும் உணர்ச்சிகரமான பய ணம்' இது என்று அவர் விவரித் தார்.



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடந்த இனவெறி எதிர்ப்புப் போராட்டம் ஒன்றின்போது பொலிஸாருக்கு அருகில் பன்றி வடிவிலான முகமூடியை அணிந்து போராட்டக்காரர் ஒருவர் நடந்து செல்கிறார்.





# மாற்று அணி என்பது காலத்தின் தேவையால் சுயமாக உருவாவது

**பனங்காட்டான்**

இலங்கையில் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்தே சுதந்திரக் கட்சி உருவானது. தமிழ் காங்கிரஸில் இருந்துதான் தமிழரசுக் கட்சி பிறந்தது. சுதந்திரக் கட்சியிலிருந்து மஹிந்தவின் பொதுஜன பெரமுனவும், ஜே.வி.பி.யிலிருந்து விமல் வீரவன்ஸவின் ஜே.என்.பி.யும் உருவாகின. ரவூவ் ஹக்கீமின் முஸ்லிம் காங்கிரஸிலிருந்தே ரிஷாத் பதியுதீனின் மக்கள் காங்கிரஸ் உருவானது. இதனை மறந்து விக்கினேஸ்வரனின் தேசியக் கூட்டணியையும், கஜேந்திரகுமாரின் தேசிய முன்னணியையும் மக்கள் தோற்கடிக்க வேண்டுமென கூட்டமைப்பு ஏன் கோருகிறது?உ

இலங்கைத் தேர்தல் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஒரு வாரம் முடிந்தாகிவிட்டது.

அடுத்த ஆறு வாரங்களை இதன் மகோற்சவ காலம் எனலாம். ஒகஸ்ட் 5 ஆம் திகதி இடம்பெறும் தேர்தல் இதன் தீர்த்தத் திருவிழா. சிலவேளை இதன் பின்னரும் வேறு சில விழாக்கள் தொடரலாம்.

ஒவ்வொரு தேர்தல் காலத்தின்போதும் அந்தத் தேர்தலை மிக முக்கியமான, வரலாற்றுச் சிறப்புமிக்க, அத்தியாவசிய முடிவுகளை எட்ட வேண்டிய தேர்தல் என்று கூறி மக்களிடம் வாக்குப் பிச்சை கேட்பது அரசியல் கட்சிகளின் வழக்கம்.

இலங்கை அரசியலாளர்கள் இதில் முன்மாதிரியானவர்கள். இதனை எழுத ஆரம்பிக்கும் வேளையில் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பில் பணியாற்றிய பிரபல ஆங்கில பத்திரிகையின் ஆசிரியர் எழுதிய கட்டுரையொன்றின் சில வரிகள் நினைவுக்கு வருகிறது.

இதனை எழுதியவர் றெஜி மைக்கல் (இவர் ஒரு தமிழர்). 1960களில் வெளிவந்த முன்னைய டெய்லி மிறர் என்ற ஆங்கிலத் தினசரியின் ஸ்தாபக ஆசிரியர் இவர்.

'தேர்தலின்போது இவர்கள் பல வாக்குறுதிகளை அள்ளி வீசுவார்கள். அடுத்த தேர்தல்வரை எதனையும் நிறைவேற்ற மாட்டார்கள். மீண்டும் அடுத்த தேர்தலில் மேடையேறி முன்னர் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போனமைக்கு விளக்கம் கொடுத்து மக்களை நம்ப வைப்பார்கள். திரும்பவும் அதே வாக்குறுதிகளை நிறைவேற்றப் போவதாக மேடைகளில் தெரிவித்து மக்களை நம்ப வைத்து (ஏமாற்றி) வெற்றி பெறுவார்கள்.

> சிங்கள அரசியலாளர்களுக்கு முண்டுகொடுக்க மண்டியிடும் கூட்டமைப்பு, தாயகம் – தேசியம் – தன்னாட்சி என்ற கோட்பாடுகளுடன் தளத்தில் நிற்கும் மாற்று அணிகளை வெட்டி வீழ்த்துமாறு மக்களிடம் எதற்காக வேண்டுகிறது

இதுதான் அரசியல் என்ற அர்த்தப்பட அந்தக் கட்டுரையை றெஜி மைக்கல் எழுதியிருந்தார்.

இது எழுதப்பட்டு அரை நூற்றாண்டு கடந்த பின்னரும் இலங்கை அரசியலைப் பொறுத்தளவில் இதுவே யதார்த்தமானது என்பது இதுவரை நிரூபிக்கப்பட்டே வருகிறது என்று நான் குறிப்பிட வேண்டிய தேவையில்லை.

தென்னிலங்கையில் மஹிந்த ராஜபக்ஷவும் அவரது தலைமையிலான பொது ஜன பெரமுன அணியும் கண்களை மூடிக் கொண்டு சிங்கள மக்களை விளித்து வாக்குறுதிகளை விசிறித் தள்ளுகின்றனர். சிலசமயம், அவர்களுக்குள்ளே ஒன்றுக்கொன்று முரணான அறிவிப்புகளும் வராமலில்லை.

முக்கியமாக தமிழர்களின் அரசியல் அபிலாஷைகள், அவர்களின் தொடர் போராட்டம், அதற்கான தீர்வு என்னும் விடயங்களில் இவர்கள் தமக்குள் முரண்பட்டுக் கொண்டாலும், தமிழர்கள் ஆளப்பட வேண்டிய இரண்டாந்தரப் பிரஜைகள் என்பதில் கருத்து வேறுபாடு கொண்டிருக்கவில்லை.

வடக்கு,கிழக்கு என்னும் தமிழர் தாயகத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் மஹிந்த அணிக்கு நிகராக மேடைகளில் முரண்பட்ட கருத்துகளில் கீறல் விழுந்த ஒலித்தட்டுகளாக காணப்படுகின்றனர். பழைய பாடல்களுக்கு புதிய பல்லவிகளை இசைக்க ஆரம்பித்துள்ளனர்.

கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் உருவாக்கவில்லை என்று கூறி வந்த சம்பந்தன், இப்போது முன்னாள் போராளிகள் விடுதலைப் புலிகளே கூட்டமைப்பை உருவாக்கினர் என்று கூறுகையில் அதனை மறுக்காது அவர்களின் ஆதரவைஇருகரம்நீட்டிவரவேற்பதை என்னென்று சொல்வது?

தமிழ்மக்கள்தேசியகூட்டணியின் தலைவர் சி.வீ.விக்கினேஸ்வரனும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் மாற்று அணியின் அவசியத்தை முன்னிறுத்தி விடும் அறிக்கைகள் கூட்டமைப்பு விட்ட தவறுகளையும், அவர்களின் கடந்த கால அரசியல் குளறுபடிகளையும் அம்பலப்படுத்தி வருகின்றன.

கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்து நாடாளுமன்றம் அனுப்பினால் எந்தப் பிரயோசனமும் இல்லையென்றும், சிங்கள அரசாங்கங்களுடன் சேர்ந்து தங்கள் சுயவிருப்புகளையே நிறைவேற்றுவார்கள் என்றும், நம்பி வாக்களிக்கும் மக்களை நட்டாற்றில் கைவிடுவார்களென்றும் மாற்று அணி அறிக்கைகள் கூறி வருகின்றன.

ஆனால் இவற்றை உதாசீனம் செய்யும் வகையில் கூட்டமைப்பு தனது பரப்புரை இயந்திரத்துக்கு புதிய வகை எண்ணெய் ஊற்ற ஆரம்பித்துள்ளது.

'எனது அன்புக்குரிய மக்களே என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பாசம் பொழிய விடுத்த அறிக்கை கடந்த வாரம் வெளியானது. தமிழ் நாட்டு அரசியல் அரங்கில், 'உடன்பிறப்புகளே, இரத்தத்தின் இரத்தங்களே என்று திராவிடத் தலைவர்கள் கவர்ச்சி காட்டி வெளியிட்ட அறிக்கைகளைப் போன்று சம்பந்தன் முதல்முறையாக 'எனது அன்புக்குரிய மக்களே என்று விளித்து அறிக்கை வெளியிட்டமையைப் பார்க்கையில், இவ்வருடத் தேர்தல் முடிவில் அவருக்கிருக்கும் அச்சத்தையும் நம்பிக்கையீனத்தையும் அவதானிக்க முடிகிறது.

மஹிந்த அணி ஆட்சியமைக்க மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவையெனில் கூட்டமைப்பு ஆதரவு வழங்கத் தயார் என்று ஒரு வெடிகுண்டை சுமந்திரன் இலகுவாக தூக்கி வீசியுள்ளார். தமிழருக்கு அரசியல் தீர்வு தர மஹிந்த அணி உடன்பட்டால் இந்த ஆதரவு வழங்கப்படுமெனவும் அவர் அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை மஹிந்த தரப்பு ஒரு விடயத்தை பகிரங்கமாகக் கூறி வருகிறது. அது, ஜனாதிபதி தேர்தலைப்போல பொதுத் தேர்தலிலும் தனிச்சிங்கள வாக்குகளால் தங்களால் வெற்றி பெற முடியும் என்பதே அந்த அறிவிப்பு. அதாவது, தமிழ், முஸ்லிம் வாக்குகள் தங்களுக்குத் தேவையில்லை என்பதே இதன் கருத்து.

மஹிந்த அணியைச் சேர்ந்த கெகலிய ரம்புக்வெல என்பவர் அண்மையில், அரசியல் ரீதியாக தமிழரின் பிரச்சினையைத் தீர்க்கத் தாங்கள் தயாரில்லையென்று கூறியமையையும் இங்கு கவனிக்க வேண்டும்.

நிலைமை இப்படியிருக்க, தாமாக கீழிறங்கி மஹிந்த அணி ஆட்சியமைக்க கூட்டமைப்பு ஆதரவளிக்குமென்று சம்பந்தனும் சுமந்திரனும் கூறி, தமிழ் மக்களின் வாக்குகளை கேட்க வேண்டிய தேவை எதற்காக என்ற கேள்வி எழுகிறது.

சிங்கள அரசியலாளர்களுக்கு முண்டுகொடுக்க மண்டியிடும் கூட்டமைப்பு, தாயகம் - தேசியம் - தன்னாட்சி என்ற கோட்பாடுகளுடன் தளத்தில் நிற்கும் மாற்று அணிகளை வெட்டி வீழ்த்துமாறு மக்களிடம் எதற்காக வேண்டுகிறது?

வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சியாக கூட்டமைப்பே இருக்கிறது என்றும், மாற்று அணிகளை மக்கள் தோற்கடித்து ஒரே அணியாக கூட்டமைப்பையே வெற்றிபெறச் செய்ய வேண்டுமெனவும் கூட்டமைப்பின் இரட்டையர்கள் செல்லும் இடமெங்கும் கூறி வருகின்றனர்.

இவர்களுக்கு இலங்கையின் அரசியல் வரலாற்றை நினைவுபடுத்த சில விடயங்களை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

சிங்கள மக்கள் மத்தியில் பல மாற்று அணிகள் உள்ளன. இவைகள் காலத்துக்குக் காலம் வேறு அணிகளிலிருந்து பிரிந்தே புதிய அணிகளாக தோற்றம் பெற்றன. அதுமட்டுமன்றி தற்போது மஹிந்தவின் பொதுஜன பெரமுன, ரணிலின் ஐக்கிய தேசிய முன்னணி, சஜித் பிரேமதாஸவின் மக்கள் சக்தி என்பவைகூட கொள்ளை=க அடிப்படையில் மாற்று அணிகளையும் இணைத்தே தேர்தலில் போட்டியிடுகின்றன.

இதனால் மாற்று அணிகள் தங்கள் தனித்துவத்தை இழக்கவில்லை. தங்கள் தலைமைத்துவத்தையும் இழக்கவில்லை.

(09 ஆம் பக்கம் பார்க்க)

# புதூர் நாகதம்பிரான் உற்சவம் இன்று 80 பேர் பங்குபற்ற மட்டுமே அனுமதி

## சுகாதார வைத்திய அதிகாரி தெரிவிப்பு

(கி.வசந்தரூபன்)

புதூர் நாகதம்பிரான் ஆலயத்திற்கு ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் மட்டுமே செல்ல முடியும். ஏனையயோர் ஆலய உற்சவத்தில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட மாட்டாது என வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் திருமதி அனோஜன் ரட்ஷாயினி தெரிவித்துள்ளார்.

இன்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவம் இன்று திங்கள் கிழமை இடம்பெறவுள்ளது. தற்போதுள்ள கொவிட் -19 பரம்பலை கட்டுப்படுத்தும் முகமாக எமது பிரதேசத்திற்கு உட்பட்ட இந்த ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் கலந்து கொள்ள கோவில் நிர்வாகத்தினர் உள்ளிட்ட குறிப்பிட்ட நபர்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனையோருக்கு ஆலயத்திற்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

பொதுமக்கள் தத்தமது வீடுகளில் பாதுகாப்பாக இருந்து பிரார்த்தனைகளில் ஈடுபடவும். நாட்டின் நன்மை கருதி எடுக்கப்பட்ட இந்த தீர்மானத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன், உங்களது நிவர்த்திக் கடன்களை பிறிதொரு தினத்தில் சென்று நிறைவேற்றுமாறும் வேண்டுகின்றோம்.

எமது சுகாதார பணிப்பாளரின் சுற்றறிக்கைக்கு அமைய கூட்டு பிராரத்தனைக்கு அனுமதி வழங்க முடியாது. அதனால் 80 பேருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனுமதி வழங்கப்பட்டவர்களுக்கு அதற்கான பாஸ் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுள்ளது. ஏனையோர் அங்கு செல்ல முடியாது. வெளிமாவட்டங்களில் இருந்து மக்கள் வருவதையும் தவிர்க்கவும். ஆகவே அரச சட்டதிட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி நாட்டை கொவிட் 19 தாக்கத்தில் இருந்து பாதுகாத்து நீங்களும் பாதுகாப்பாக இருக்கள் எனத் தெரிவித்தார். (உ - 100)



# கோழி இறைச்சியை கூடிய விலைக்கு விற்ற ஐந்து வர்த்தகர்கள் மீது வழக்கு

அம்பாறை மாவட்டத்தில் கட்டுப்பாட்டு விலையை மீறி கோழி இறைச்சியைக் கூடுதல் விலைக்கு விற்பனை செய்த 05 வர்த்தகர்களுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி என்.எம். சப்றாஸ் தெரிவித்தார்.

ஒரு கிலோகிராம் கோழி இறைச்சி தோலுடன் 430 ரூபாயாகவும், தோல் நீக்கப்பட்ட கோழி இறைச்சி 500 ரூபாயாகவும் மார்ச் மாதம் 12ஆம் திகதி முதல் விலை நிர்ணயம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக, அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்களால் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் 18ஆம் திகதி வரை மேற்கொண்ட சுற்றிவளைப்புகளின் போது, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 60 வர்த்தகர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இந்த வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யவுள்ளன எனவும் என்.எம். சப்றாஸ் கூறினார்.

# மாற்று அணி என்பது...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த எழுபது ஆண்டு காலத்தில் இலங்கையில் கட்சிகளும் அணிகளும் எவ்வாறு உருவாகின என்ற வரலாற்றை கூட்டமைப்பு சற்றுத் திரும்பிப் பார்க்க வேண்டும். இலங்கையின் முதலாவது சிங்கள அரசியல் கட்சியான ஐக்கிய தேசிய கட்சியிலிருந்துதான் பண்டாரநாயக்கவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிறந்தது. ஜி.ஜி.பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து சென்றே எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார்.

என்.எம்.பெரேராவின் சமசமாஜக் கட்சியிலிருந்து பிரிந்து வாசுதேவ நாணயக்கார நவசமசமாஜக் கட்சியை ஆரம்பித்தார். ஜே.வி.பி. இலிருந்து பிரிந்துதான் விமல் வீரவன்ஸ ஜே.என்.பி. என்ற புதிய கட்சியை ஆரம்பித்தார். ரவூப் ஹக்கீமின் இலங்கை முஸ்லிம் காங்கிரஸிலிருந்து வெளியேறித்தான் ரிஷாத் பதியுதீன் மக்கள் காங்கிரஸை ஆரம்பித்தார்.

கடந்த வருடத்தில் சுதந்திரக் கட்சியிலிருந்து விலகிய மஹிந்த ராஜபக்ஷ பொதுஜன பெரமுன என்ற புதிய அணியை ஆரம்பித்தார். இங்கு முக்கியமாக அவதானிக்க வேண்டிய ஒன்றுண்டு. ஒவ்வொரு கட்சியிலிருந்தும் பிரிந்து உருவான புதிய அணிகள் இதுவரை அழிந்து போகவில்லை. மக்களால் தோற்கடிக்கப்படவும் இல்லை. அனைத்து அணிகளும் தேர்தல்களில் வெற்றி பெற்று நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்றே வருகின்றன. அவர்களை மக்களே தெரிவு செய்து அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.

நிலைமை இப்படியிருக்க, தமிழ் தேசிய கூட்டமைப்பு எதற்காக விக்கினேஸ்வரனின் கூட்டணியையும், கஜேந்திரகுமாரின் முன்னணியையும் மக்கள் தோற்கடித்து, தங்களை மட்டும் ஒற்றைத் தலைமையாக வெற்றிபெறவைக்க வேண்டுமென கேட்கிறார்கள்?

தேர்தலில் நீதிபதிகள் வேட்பாளர்கள் அல்லர். வாக்காளர்களே வெற்றி - தோல்வியைத் தீர்மானிப்பவர்கள். தங்கள் கொள்கையை ஆத்மசுத்தியாக வெளிப்படுத்தி வாக்குக் கேட்க வேண்டிய கூட்டமைப்பு தூரமிறங்கி மாற்றுத் தலைமைகளை தோற்கடிக்க வேண்டுமென வேண்டுவது எந்த வகையிலும் நியாயமாகாது.

கூட்டமைப்பிடம் ஆரோக்கியமான பதில் வேண்டி முன்வைக்க வேண்டிய ஒரு கேள்வி இங்குண்டு.

வடக்கில் மஹிந்தவின் தலைமையிலான அணியிலும் ரணிலின் தலைமையிலான அணியிலும் (இரண்டுமே சிங்களத் தலைமைகள்) போட்டியிடும் டக்ளஸ் தேவானந்தவையும், விஜயகலா மகேஸ்வரனையும் தோற்கடிக்க வேண்டுமென கேட்காது, மாற்றுஅணியென்று மாயைகாட்டிவிக்கினேஸ்வரனையும் கஜேந்திரகுமாரையும் மட்டும் எதற்காக இலக்கு வைக்கிறார்கள்?

டக்ளஸும், விஜயகலாவும் வென்றாலும் பரவாயில்லை, விக்கினேஸ்வரனும் கஜேந்திரகுமாரும் வெற்றிபெறக்கூடாது என்பதுதான் கூட்டமைப்பின் இந்த வருட தேர்தல் விஞ்ஞாபனமா?

# சுமாவுக்காகப் பிரச்சாரம் செய்வதற்காக என்னைத் தோற்கடித்தால் அதை ஏற்பேன்

## துணிச்சலாகக் கூறுகின்றார் முன்னாள் எம்.பி. சிறீதரன்



யாழ்ப்பாணம், ஜூன் 22

சுமந்திரன் என்கிற அறிவு பூர்வமாக சிந்திக்கின்ற ஒருவர் எமது தேச விடுதலை வரலாற்றில் வேண்டும் என்று நான் சொல்வது பிழை என்று தமிழ் மக்கள் கருதி, என்னைத் தேர்தலில் தோற்கடித்தால் அதனைப் பரிபூரணமாக ஏற்கத்தயார் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சியில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் சுமந்திரனுக்காகப் பிரச்சாரம் செய்வதற்காகத் தமிழ் மக்கள் என்னைத் தோற்கடிப்பார்களாக இருந்தால், அந்த வரலாற்றுத் தோல்வியை ஏற்கத் தயார் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்ததார் என சமூக ஊடகங்களில் வெளிவந்த செய்தி



தொடர்பில் அவருடன் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

"நான் திருடவில்லை, மக்களின் பணத்தில் ஊதாரித்தனமாக நடக்கவில்லை, மக்கள் தந்த ஆணைக்கு மாறாக நடக்கவில்லை" - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம -1)

# கொரோனாவுடன் நேற்றுமுன்தினம் எவரும் அடையாளம் காணப்படவில்லை!

கொழும்பு, ஜூன் 22

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான எவரும் நேற்று மாலை வரை அடையாளம் காணப்படவில்லை. இதேவேளை, மேலும் 26 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் நேற்று எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் படி, கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதாக அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1,950 ஆகக் காணப்படுகின்றது. குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,498 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்றுமுன்தினமும் கொரோனாத் தொற்றுடன் எவரும் அடையாளம் காணப்படவில்லை. இறுதியாக கடந்த ஏப்ரல் 16ஆம் திகதியும் (65 நாள்களுக்கு முன்னர்) இவ்வாறு எவரும் அடையாளம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை அடையாளம் காணப்பட்டவர்களில் கடற்படை மற்றும் அவர்களுடன் நெருக்கமான 938 பேர் அடங்குகின்றனர். இதில் 901 பேர் கடற்படையினராவர். குணமடைந்த கடற்படையினரின் எண்ணிக்கை 773 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, வெளிநாட்டுப் பிரஜைகள் 8 பேர் உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து வந்த 699 பேர் இதுவரை கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொரோனாவால் இதுவரை பாதிக்கப்பட்ட 1,950 பேரில் தற்போது 441 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் 25 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

# தேர்தலுக்கான சுகாதர விதிகள்; வர்த்தமானிப் பிரகடனம் இன்று!




கொழும்பு, ஜூன் 22

பொதுத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான சுகாதார நடைமுறைகள் உள்ளடங்கிய வர்த்தமானி அறிவித்தலை இன்று நள்ளிரவு வெளியிட எதிர்ப்பார்ப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

நோய் பரவலைத் தடுக்கும் விதமாக சுகாதார ஆலோசனைகள் இந்த வர்த்தமானியில் உள்ளடங்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அதனடிப்படையில் தேர்தலை குறித்த வர்த்தமானியின் பிரகாரம் நடத்துவது தொடர்பில் அனைத்து மாவட்ட தெரிவுக்குழு அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட உள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

### தொல்பொருள், புராதனச் சின்னங்களைக் காப்பாற்றுவதற்கான

# நியதிச்சட்டத்தை உருவாக்கத் தவறிய கூட்டமைப்பு போலியாக நீலிக்கண்ணீர் வடிப்பதில் அர்த்தமில்லை

### மாகாண சபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா காட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வடக்கின் தொல்பொருள் மற்றும் புராதன சின்னங்களைக் காப்பாற்றத் தவறியது வடக்கு மாகாணசபையே என்றும், சந்தர்ப்பங்கள் கிடைத்தபோது அவற்றைப் பயன்படுத்தாமல், அசமந்தப் போக்காக இருந்துவிட்டு மாயக்கண்ணீர் வடிப்பதில் அர்த்தம் இல்லை என்றும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் கிழக்கு மாகா ணத்திலுள்ள மரபுரிமைகளை முகாமைத்துவம் செய்வதற்காக உருவாக்கப்பட்ட செயலணியின் உறுப்பினர் ஒருவர், வடக்கிலும் தொல்பொருள் மற்றும் புராதன சின்னங்களை அடையாளம் காண்பதற்கு செயலணி ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று அண்மையில் கூறிய கருத்துத் தொடர்பில் கேட்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கிழக்கு மாகாணத்திலுள்ள மரபுரிமைகளை முகாமைத்துவம் செய்வதற்காக உருவாக்கப்பட்ட செயலணியின் உறுப்பினர் ஒருவர் வடக்கு மாகாணத்திலும் கிழக்கை போன்றதொரு ஒரு செயலணி உருவாக்கப்பட வேண்டும் என கூறியதைத் தொடர்ந்து ஏட்டிக்கு போட்டியாக இன்று பலர் அறிக்கைகள் விட்ட வண்ணம் இருக்கின்றனர். ஆனாலும் அந்த விடயம் தொடர்பாக எமக்கு இருக்கின்ற அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு நாம் தவறியதன் விளைவே இது என்பதனை அவ்வாறு அறிக்கைவிடும் தமிழ் அரசியல் வாதிகள் உணர்ந்து கொள்வார்களா? தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என நாடாளுமன்றத்தினால் உருவாக்கப்பட்ட சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்டவை தவிர, தொல்பொருள்சார் அமைவிடங்களும் புராதன விடயங்களும் ஒருங்கிய நிரலுக்குரிய விடயமாக 13 வது திருத்தச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொல்பொருள் சார் விடயத்திற்கும், ஒருங்கிய நிரலில் கூறப்பட்டிருப்பதற்கு அமைவாக நியதிச் சட்டத்தை ஆக்குமாறு பலமுறை மாகாணசபையில் நான் முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தேன். எனது கோரிக்கைக்கு முதலமைச்சரோ அல்லது மாகாணசபையில் பெரும்பான்மையை கொண்ட கூட்டமைப்பின் உறுப்பினர்களோ அன்று முக்கியத்துவம் கொடுத்திருக்கவில்லை.

அவ்வாறு நியதி சட்டத்தை உருவாக்கியிருந்தால் அந்த நியதி சட்டத்தின் கீழ் மத்திய அரசினால் பிரகடனப்படுத்தப்படாத தொல்பொருள்சார் அமைவிடங்களையும் புராதன இடங்களையும் மாகாணசபையின் கீழ் பிரகடனப்படுத்தி அதன் பொறுப்பின் கீழ் கொண்டு வந்திருக்கலாம். உண்மையில் சந்தர்ப்பம் கிடைக்கும்போது அதனை பாவிக்காது காலத்தினை கழித்துவிட்டு இன்று மாயகண்ணீர் வடிப்பதில் அர்த்தம் இல்லை. – என்றார்

(ம – 11)



## புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களுக்கு யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் உதவி!





யாழ்ப்பாணம், ஜூன் 22

‘தியாகி அறக்கொடை நிதி’யத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் இவ்வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பயிற்சி வினாத்தாள்கள் இன்று முதல் வழங்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக யாழ்ப்பாணம் கல்வி வலயத்தினுள் உள்ள பாடசாலைகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்காக 8 ஆயிரத்து 934 வினாத்தாள்கள் இன்று யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிமனையில் கையளிக்கப்படவுள்ளன.

கொரோனா இடர் கால நிலைமைகளினால் பாடசாலைகளின் கற்றல் செயற்பாடுகள் தடைப்பட்டிருப்பதனால், அதனை நிவர்த்தி செய்யும் முகமாக தரம் 5 மாணவர்களுக்கான பரீட்சை வினாத்தாள்கள் வழங்கப்படவுள்ளன. இன்று யாழ் வலையக்கல்வி அலுவலகத்தில் வினாத்தாள்கள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் தினங்களில் வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம், தீவக வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக அந்தந்த வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளன என்றும், கொரோன இடர்கால நிலைமைகளில் தடைப்பட்டுள்ள மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்தும் வகையில் எதிர்வரும் காலங்களில் க.பொ.த சாதாரண தர, க.பொ.த உயர்தர மாணவர்களுக்கும் உதவிகள் வழங்கப்படவுள்ளன என்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் எம். பாலேந்திரா தெரிவித்தார்.

(ம – 11)

## சுவரொட்டிகள் ஒட்டினால் பிடியாணையின்றி கைது!

### மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 22

பொதுத்தேர்தலுடன் சம்பந்தப்பட்ட சுவரொட்டிகள், தட்டிகள் மற்றும் இலக்கங்களைக் காட்சிப்படுத்துவது பிடியாணை இன்றி கைது செய்யக் கூடிய குற்றம் எனத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டத்துக்கு அமைய தேர்தல் அலுவலகங்களின் கட்சி மற்றும் சின்னத்தை காட்சிப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் வேட்பாளரின் புகைப்படம் மற்றும் இலக்கங்களைக் காட்சிப்படுத்த அனுமதியில்லை எனவும் அவர் கூறினார்.

தேர்தல் அலுவலகங்களில் தட்டிகளை காட்சிப்படுத்த இடமளிக்காத நடவடிக்கையானது தேர்தல் ஆணைக்குழுவில் நீண்ட கால மாக இருந்து வரும் பிரச்சினை.

எது எப்படி இருந்தபோதிலும் தேர்தல் சட்டங்களை மீறி செயற்பட்டதால், பொலிஸார் அதற்கு எதிராக வழக்குத் தொடர்வார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## வடமராட்சி கிழக்கில் சுமந்திரன் மும்முரம்!

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி தொடக்கம் கடைக்காடு வரையான கிராமங்களில் பத்துக்கும் மேற்பட்ட மக்கள் சந்திப்புக்களில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்து கொண்டார் .

காலை 9 மணி தொடக்கம் மாலை 6.30 மணிவரை இச் சந்திப்புக்கள் இடம்பெற்றன. இச் சந்திப்புகளில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சுகிர்தன், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.சா.அரியகுமார், உபதவிசாளர் கு.தினேஷ், பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இறுதியாக கட்டைக்காடு கிராமத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனும் கலந்து கொண் டார்.





# பாதுகாப்பு அதிகாரிகள் 150 பேர் வெளிநாடு சென்றால் ஆபத்து?

இலங்கையின் 150இற்கும் மேற்பட்ட பாதுகாப்பு அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் சென்றால், கைது செய்யப்படும் ஆபத்து இருப்பதாக, சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவம், கடற்படை, பொலிஸ் பயங்கரவாத தடுப்பு பிரிவு, குற்றவியல் விசாரணைப் பிரிவு போன்றவற்றைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட அதிகாரிகளுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

போர் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள 150 பாதுகாப்பு அதிகாரிகள் பற்றிய விவரங்களை ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் அதிகாரியும், உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச திட்டத்தின் பணிப்பாளருமான யஸ்மின் சூகா பல்வேறு நாடுகளின் விமான நிலையங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும் அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஒஸ்ரியா, இத்தாலி உட்பட ஐரோப்பிய நாடுகள் மற்றும் போல்டிக் நாடுகளின் விமான நிலையங்களுக்கு இந்தப் பட்டியலை அவர் அனுப்பி வைத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பட்டியலில் முன்னாள் இராணுவ அதிகாரிகள் 61 பேரின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும், அவர்கள் வெளிநாடு சென்றால் கைது செய்யப்படும் ஆபத்து இருப்பதாகவும் சிங்கள ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச சட்டத்திற்கு அமைய இவர்களை கைது செய்யுமாறும் யஸ்மின் சூகா கோரியிருக்கிறார் எனவும், இந்த அதிகாரிகளுக்கு எதிராக யஸ்மின் சூகா 76 விசாரணை அறிக்கைகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அனுப்பியுள்ளார் என்றும் அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, யஸ்மின் சூகாவின் அறிக்கையில் தமக்கு எதிராக அவதூறு பரப்பப்பட்டுள்ளதாக கூறி அரச புலனாய்வுச் சேவையின் பணிப்பாளரான மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே சட்ட நடவடிக்கை எடுக்கப்போகிறார் எனத் தனது சட்டத்தரணிகள் மூலம் அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## இனி இது...

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

*செயற்பட்டார்கள் என்பதை அவர்களுக்கு உணர்த்தும் வகையில் இந்த பகிஷ்கரிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு அது அவர்களுக்கு விளங்கப்படுத்தப்பட்டது. சர்வதேச அரங்கில் எவ்வாறு எங்களுடன் (இலங்கையுடன்) ஊடாடிப் பழக வேண்டும் என்பது அவர்களுக்கு உணர்த்தப்பட்டது. ”*– என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐரோப்பிய யூனியன் அங்கத்தவரான அயர்லாந்து அந்த யூனியனில் இலங்கை விடயங்கள் வரும் போது இலங்கைக்கு மாறான நிலைப்பாடு எடுப்பதாகக் கொழும்பு கருதுகின்றது.

அதேபோல கனடாவும், நேர்வேயும் புலம்பெயர் தமிழர்களின் செல்வாக்குக்கு உட்பட்டு தனக்கு எதிராகவே எப்போதும் செயற்படுகின்றன என்று இலங்கை கருதுகின்றது.

மேற்குலகின் இந்த நிலைப்பாட்டுக்கு இந்த நடவடிக்கை மூலம் சரியான பாடம் புகட்டப்பட்டிருப்பதாக கொழும்பு எகிறுகின்றது.

இது கொழும்புக்கு நல்லதற்கல்ல என்று எனக்குத் தோன்றுகின்றது.

நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

–மின்னல்–

---


# மரண அறிவித்தல்

தோற்றம் 13 – 08 – 1944

மறைவு 21 – 06 – 2020



## திருமதி ருக்குமணி ஆனந்தவேல்

(ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர், முன்னாள் நீர்வேலி கந்தசுவாமி கோவில் தேவஸ்தான போசகரும், பொருளாளரும், நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சிக்கனகடன் வழங்கும் கூட்டுறவுச் சங்க தலைவர், நீர்வேலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர், நீர்வேலி ஸ்ரீ முருகன் வேதவல்லி சேமிப்புக் கழகத் தலைவர்.)

நீர்வேலி கந்தசுவாமி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ருக்குமணி ஆனந்தவேல் நேற்று (21.06.2020) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா – இராசாங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிமுத்து – நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆனந்தவேலின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தனபாலசிங்கம், மல்லிகாதேவி ஆகியோரின் சகோதரியும், பொன்னுச்சாமி, காலஞ்சென்றவர்களான சுகுணாதேவி, செல்வரத்தினம், இராசம்மா மற்றும் சோதிலிங்கம் (நீர்வேலி கந்தசுவாமி கோவில் பரிபாலனசபை தலைவர்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2020) திங்கட்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி கந்தசுவாமி
கோவிலடி, நீர்வேலி.

தகவல் : புவிச்சந்திரன் வித்தியா
(பெறாமகள்)

தொடர்புகளுக்கு: 021 321 3443, 077 381 6850


---

### மஹிந்தானந்த அளுத்கமகேவின்

# ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டு: பொய்யெனில் 2 வருடச் சிறை

கொழும்பு, ஜூன் 22

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்திருக்கும் ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டு பொய்ப் பிரசாரமாக இருந்தால் சர்வதேச கிரிக்கெட் நிறுவனத்தின் சட்டத்தின் பிரகாரம் இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கலாம் என விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னாள் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி பண்டுக கீர்த்தினந்த தெரிவித்தார்.

2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணக் கிரிக்கெட் இறுதிப்போட்டியின்போது ஆட்ட நிர்ணயம் இடம்பெற்றுள்ளதாக அப்போது விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்த மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்திருக்கும் கூற்று, கிரிக்கெட் உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அவரின் இந்தச் சர்ச்சைக்குரிய கூற்று தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னாள் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி பண்டுக கீர்த்தினந்த கருத்தைத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

விளையாட்டுக்களில் பிழை, மோசடிகளைத் தடுக்கும் வகையில் கடந்த 2019 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தின் கீழ், தற்போது தெரிவிக்கப்படும் ஆட்ட நிர்ணயம் இடம்பெற்றிருந்தால், அவர்களுக்கு எதிராக குறித்த சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியாது. ஏனெனில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகேயின் ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டு குறித்த சட்டம் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் இடம்பெற்ற விடயமொன்றாகும்.

எனினும், சர்வதேச கிரிக்கெட் நிறுவனத்தின் ஊழல் ஒழிப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கமுடியும். ஆனால், இதில் பிரதானமாக இடம்பெறவேண்டி இருப்பது இந்தக் கூற்றின் உண்மைத்தன்மை தொடர்பாக தேடிப்பார்ப்பதாகும். ஒருவேளை, மஹிந்தானந்த அளுத்கமகேயின் கூற்று பொய்க் குற்றச்சாட்டாக இருந்தால், இந்தச் சட்டத்தின் பிரகாரம் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும்.

அதாவது, அவர் பொய்க் குற்றச்சாட்டு ஒன்றைத் தெரிவித்தார் என்ற குற்றத்துக்காக அவருக்கு எதிராக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, விசாரணையில் குற்றம் ஒப்புவிக்கப்படும் பட்சத்தில் ஒரு இலட்சம் ரூபா வரை தண்டப்பணம் அல்லது இரண்டு வருட சிறைத்தண்டனைக்கு ஆளாகுவார் – என்றார்.

---

# கருணாவை உடன் கைதுசெய்து சிறைச்சாலையில் அடையுங்கள்

### ஜனாதிபதி, பிரதமரிடம் சோபித தேரர் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 22

அரசின் பாதுகாப்பு இருக்கின்ற தைரியத்திலேயே இராணுவத்தினரைத் தான் கொலை செய்ததாகப் பகிரங்கமாகக் கருணா அம்மான் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் உடன் தலையிட்டு அவரைக் கைதுசெய்ய வேண்டும். அவரைச் சிறைச்சாலையில் அடைத்து உரிய தண்டனை வழங்க வேண்டும். அதற்காக நாங்கள் ஆதரவளிப்போம் .– இவ்வாறு தென் மாகாண தேரர்களின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

எம்பிலிபிட்டிய பிரமதேசத்தில் நேற்று நடைபெற்ற விசேட சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: –

ஆனையிறவு இராணுவ முகாமைத் தாக்கிப் பிடிக்கும்போது தனது கட்டளையின் அடிப்படையில் 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் வரையிலான இராணுவத்தினரை ஒரே இரவில் கொலை செய்ததாக கருணா அம்மான் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இவ்வாறான சட்டவிரோத செயலைத் தான் செய்ததாக பகிரங்கமாக தெரிவித்து இரண்டு நாள்கள் கடந்தும் கருணா அம்மானுக்கு எதிராக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கின்றது.

நாட்டின் இராணுவம் என்பது சட்டபூர்வமான படையணியாகும். நாட்டின் பாதுகாப்புக்காக இராணுவத்தினர் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். அவ்வாறான ஒருவரைக்கூட சட்டவிரோதமாகக் கொலை செய்தாலும் அது பாரிய குற்றமாகும். இந்தப் பாரிய சட்டவிரோதச் செயலைத் தானே செய்தார் எனத் தற்போது அச்சமின்றி கருணா அம்மான் தெரிவிப்பதாக இருந்தால் அதில் பல கேள்விகள் இருக்கின்றன. அவர் எவ்வாறு அச்சமின்றி இதனைப் பகிரங்கமாகத் தெரிவிக்க முடியும்?

கருணா அம்மான் விடுதலைப்புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளில் இருந்து, பின்னர் இராஜதந்திர நடவடிக்கைகளை ஏற்படுத்திக்கொண்டு, அரச பொறிமுறைக்குள் இணைந்துகொண்டார். பின்னர் கட்சி ஒன்றின் உப தலைவராகவும், பிரதி அமைச்சராகவும் செயற்பட்டார்.

இவ்வாறு இருந்து தற்போது தேர்தலில் போட்டியிடும் இவருக்கு கட்சிகளின் தலைவர்கள், அரச அதிகாரிகளின் ஆசிர்வாதம் இருக்கின்றது. அவர் எந்த நடவடிக்கையில் ஈடுபட்டாலும் அவரைப் பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கையிலே அவர் தற்போது இவ்வாறான பயங்கரமான கூற்றை அச்சமின்றி தெரிவித்திருக்கின்றார்.

தனது நாவினாலே இந்த மாபெரும் குற்றத்தைத் தெரிவிக்கும் கருணா அம்மானுக்கு எதிராக சட்டமா அதிபர் என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றார் எனக் கேட்கின்றேன். இராணுவ வீரர்களைக் கொலை செய்தார் தனது நாவினாலே கருணா அம்மான் தெரிவிக்கும்போது அதற்கு வேறு சாட்சியங்கள் எதற்கு? அதனால் நீதித்துறையின் கௌரவத்தைப் பாதுகாத்துக்கொள்ள ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் உடன் தலையிட்டு கருணா அம்மானைக் கைதுசெய்ய வேண்டும். அவரைச் சிறைச்சாலையில் அடைத்து உரிய தண்டனை வழங்க வேண்டும்.

அதிகாரிகள், நீதித்துறையினர் தங்கள் கடமையைச் சரியான முறையில் செய்து கருணா அம்மானுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிட்டால், முப்படையினர் தங்களின் தற்காப்புக்காக நடவடிக்கை எடுக்க நேரிடும்.

கருணாவால் கொலை செய்யப்பட்ட சகோதர இராணுவ வீரர்களுக்காக, இராணுவத்தினர் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும். அதற்காக மக்களுடன் நாங்கள் ஆதரவாக இருப்போம் – என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir



# முரண்பாடான அரசை இம்முறை தோற்றுவிக்கமாட்டார்கள் மக்கள்

## வாசுதேவ அதீத நம்பிக்கை

ஜனாதிபதிகோட்டாபயராஜபக்ஷவின்கொள்கைகளுடன் ஐக்கிய மக்கள் சக்தியினரால் ஒருபோதும் இணைந்து செயற்பட முடியாது. மைத்திரி – ரணில் தலைமையிலான முரண்பாடான அரசைப் போல் இம்முறையும் மக்கள் அதுபோன்றதொரு அரசை தோற்றுவிக்கமாட்டார்கள்.

–இவ்வாறு மஹிந்த அணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நிகழ்கால அரசியல் நிலைவரம் குறித்து கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பொதுத்தேர்தலுக்குப் பின்னர் அரசையும் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமாக சிறிகொத்தாவையும் கைப்பற்றுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிடுவது நகைப்புக்குரியது. ஜனாதிபதியுடன் இணக்கமாகச் செயற்பட முடியும் என்று தற்போது இவர்கள் குறிப்பிடுவதன் பின்னணி என்ன என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இரு வேறுபட்ட கொள்கைகளைக்கொண்ட அரசியல் கட்சிகள் இணைந்து அரசை அமைத்து அதனைச் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பது நல்லாட்சியில் உருவாக்கப்பட்ட தேசிய அரசின் ஊடாகத் தெளிவுபடுத்தப்பட்டது.

காலம்காலமாக இரு வேறுபட்ட கொள்கைகளைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவை இணைந்து செயற்படக் கூட்டணியமைத்தும் வெற்றி பெறவில்லை. அரசியல் கொள்கையின் அடிப்படையில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஒரு கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாகத் தெரிவுசெய்யப்பட வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் முரண்பாடுகள் முழு நாட்டையும் இல்லாதொழித்தன. ஏப்ரல் 21குண்டுத்தாக்குதல் சம்பவம் இன்றும் பல கேள்விகளை ஏற்படுத்திய வண்ணம் உள்ளது. இன்றும் இவ்விருவரும் ஆணைக்குழுக்கள் எழுப்பும் கேள்விகளுக்கு முரண்பாடான விதத்திலே கருத்துத் தெரிவிக்கின்றார்கள்.

ஜனாதிபதியின் கொள்கைகள் ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கைக்கு முற்றிலும் முரணானது. இரு தரப்பினரும் ஒருபோதும் ஒன்றிணைந்து அரசியல் ரீதியில் பயணிக்க முடியாது. கடந்த அரசைப் போன்று பலவீனமான அரச நிர்வாகத்தை மக்கள் எதிர்பார்க்கவில்லை. முரண்பாடான அரசை ஒருபோதும் தோற்றுவிக்கமாட்டார்கள்.

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான ஆசனங்களைப் பெற்று நிலையான அரசை அமைக்கும். கடந்த காலத் தவறுகளைத் திருத்திக்கொண்டு ஜனாதிபதியின் 'சுபீட்சமான எதிர்காலம்' என்ற கொள்கையை முன்னெடுத்துச் செல்வது பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் எதிர்பார்ப்பு – என்றார்.

# குற்றவியல், பயங்கரவாத தடைச் சட்டங்களின் கீழ் கருணாவுக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுக்குக!

## சம்பிக்க ரணவக்க வலியுறுத்து

**கொழும்பு, ஜூன் 22**

**ஒரே இரவில் 3 ஆயிரம் இராணுவத்தினரைத் தான் கொலைசெய்தார் என முன்னாள் பிரதி அமைச்சர் உறுப்பினர் கருணா அம்மான் வெளியிட்டுள்ள கருத்து அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு பிரதான சாட்சியமாகும். அவரே அவரது குற்றங்களை ஒப்புக்கொண்டுள்ளமையால், அவருக்கு எதிராக குற்றவியல் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டங்களின் கீழ் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.**



– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க வலியுறுத்தியுள்ளார்.

இனவாத அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் ராஜபக்ஷக்களின் அரசுக்கே ஆதரவளிப்பதாகத் தெரிவித்திருக்கும் கருணா, கிழக்கில் தமிழ் மக்கள் முன்னிலையில் ஆயிரக்கணக்கான இராணுவத்தினரைக் கொலைச் செய்ததாக குறிப்பிட்டு தன்னை ஒரு வீரனாக சித்திரித்து , தமிழீழ விடுதலைப்புலிகளின் வீரனாகவே நாடாளுமன்றத்தில் கால்பதிக்க முயற்சிக்கின்றார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அரசு இனவாதத்தைக் காண்பித்தே செயற்பட்டு வருகின்றது. இராணுவத்தினர் தம்மிடம் இருப்பதாகக் காண்பித்துக்கொண்டு இனவாத அரசியல் செயற்பாடுகளை தெற்கில் மேற்கொள்கின்றார்கள். ஆனால், பொதுத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டாலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு தனது ஆதரவை பெற்றுக்கொடுப்பதாக முன்னாள் பிரதி அமைச்சர் கருணா அம்மான் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்களுள் ஒருவராக இருந்த கருணா அம்மான் தான் ஆனையிறவில் ஒரே இரவில் 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் வரையிலான இராணுவத்தினரைக் கொன்று குவித்ததாக கிழக்கில் பிரசாரம் செய்துள்ளார்.

இவர் கிழக்கில் தமிழ் மக்கள் முன்னிலையில் தன்னை ஒரு வீரனாகக் காண்பித்துக் கொண்டு விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சிறந்த வீரராகவே நாடாளுமன்றத்துக்கு வர முயற்சிக்கின்றார். இவருக்கு எதிரான பல குற்றச்சாட்டுகள் ஏற்கனவே முன்வைக்கப்பட்டாலும், போதியளவான சாட்சிகள் கிடைக்கப் பெறவில்லை. ஆனால், தற்போது அவரே வாக்குமூலம் வழங்கியுள்ளார். இதனைப் பயன்படுத்தி அவருக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழும் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தநிலையில் போர்க்களத்திலிருந்து வெற்றியைப் பெற்றுக் கொடுத்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, மேஜர் ஜெனரல் சுமித் அத்தபத்து மற்றும் மேஜர் ஜெனரால் ரணவக்க போன்ற இராணுவ அதிகாரிகள் பலர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துகொண்டுள்ளனர் என்பதையும் மக்களுக்குக் கூற விரும்புகின்றோம்.

2015ஆம் ஆண்டு நாட்டு மக்கள் நல்லாட்சி அரசுக்கு ஆணை பெற்றுக் கொடுத்திருந்தனர். கடந்தகால ஆட்சியில் இடம்பெற்ற மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவே இந்த ஆணையை மக்கள் வழங்கியிருந்தனர். ஆனால், அந்த நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இதேவேளை, நல்லாட்சி அரசிலே மத்திய வங்கி பிணைமுறி மோசடியும் இடம்பெற்றது. அர்ஜுன மகேந்திரனை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்க எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு நானும், முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுமே எதிர்ப்புத் தெரிவித்திருந்தோம்.

இந்தநிலையில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்களுள் ஒருவரான கே.பியை அழைத்து வந்ததுபோல் அர்ஜுன மகேந்திரனை அழைத்து வருவதாக பொய் உரைத்து ஜனாதிபதித் தேர்தலை வெற்றிகொண்டு அதனூடாகப் பிரதமரான மஹிந்த ராஜபக்ஷவுக்கு தாம் கூறியதைப் போன்று அர்ஜுன மகேந்திரனை அவ்வாறு அழைத்து வருமாறு நான் சவால் விடுகின்றேன்.

மத்திய வங்கி மோசடியுடன் சம்பந்தப்பட்டுள்ள தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்துகின்றேன். இந்த நடவடிக்கைகளுக்கான அனைத்து ஒத்துழைப்புகளையும் நாங்கள் பெற்றுக்கொடுக்கத் தயாராகவே இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் – என்றார்.

# என்னைப் பழிவாங்கக் கொண்டுவந்த 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் இன்று சந்தி சிரிக்கும் நிலையில்

## பிரதமர் மஹிந்தர் கூறுகின்றார்

தனிப்பட்ட ரீதியில் தம்மைப் பழிவாங்குவதற்காக கொண்டு வரப்பட்ட 19 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் தற்போது கேலிக்குரியதாக மாறியுள்ளது எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குருநாகல் வாரியபொலவில் நேற்று மதியம் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

19 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை மாற்றியமைக்கத் தேர்தலில் பெருவாரியாக வெற்றி பெறச் செய்து மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை எமக்கு வழங்க வேண்டும்.

இந்த அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை எழுதி கொண்டு வந்தவர்கள், அதனை மாற்ற வேண்டும் என்று கூறுகின்றனர். மக்களுக்குத் தற்போது என்னை விட அரசியல் நன்றாகத் தெரியும். முன்னைய காலத்தைப் போன்றல்ல, தற்போது அனைவரும் மிகவும் உணர்வுபூர்வமாக சிறந்த புரிந்துணர்வுடன் இருக்கின்றனர்.

2015 ஆம் ஆண்டு நாங்கள் தோல்வியடைந்த பின்னர் நாட்டில் ஏற்பட்ட நிலைமையை நீங்கள் அறிவீர்கள். இந்த 5 ஆண்டுகளில் நாட்டின் அபிவிருத்தி முற்றாக ஸ்தம்பித்து போனது. நாங்கள் ஏற்படுத்திய அபிவிருத்தியும் வலுவான பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்தன. வலுவிழந்த மற்றும் கடன்பட்ட பொருளாதாரத்தையை எங்களிடம் மீளக் கையளித்தனர்.எனவே, இந்த நிலைமையில் மாற்றங்களை ஏற்படுத்த நாங்கள் தயாராக இருக்கின்றோம். பொருளாதார வீழ்ச்சி காரணமாக வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்தது. அனைத்து துறைகளும் கடந்த 5 ஆண்டுகளில் பலவீனமடைந்தன.

வீதியை நிர்மாணிப்பது, குளங்களை புனரமைப்பது போன்றவை மாத்திரமல்ல, முழு அபிவிருத்தியும் நின்று போனது. அவர்களிடம் இவற்றுக்கான தீர்வுகள் இருக்கவில்லை. குறைந்தது காட்டு யானைகளின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் அவர்களிடம் நேரம் இருக்கவில்லை. மனிதர்களுக்கும், யானைகளுக்கும் இடையிலான மோதல்களை தடுக்க அவர்களுக்கு சக்தி இருக்கவில்லை.

இப்படியான நிலைமையிலேயே நாங்கள் இந்த நாடாளுமன்றத் தேர்தலை நடத்துகிறோம் எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

# திருகோணமலையில் புதிய அமைப்பு உதயம்

அகில இலங்கை ஐக்கிய மக்கள் மய்யம் எனும் அமைப்பு திருகோணமலையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.


தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து விலகிய கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜே. ஜெனார்த்தனன் தலைமையில், இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் கட்சிகளிலிருந்து விலகிய உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களால் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதுடன், எதிர் காலத்தில் மாகாணம் தழுவிய ரீதியில் அந்த அமைப்பு தனது செயற்பாட்டை விரிவுபடுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.06.2020 இல் வெளியிடப்பெற்றது.




# சித்திரப்போட்டி







படம் 1
டி. ஹரிஸ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

படம் 2
ஆர். பிரிதி - தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

**இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு- ‘வீதி விபத்து’**

**நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் ‘பாடசாலை’ எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத் தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிக மாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங் களை வரைந்த வர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.**

அ. க. ரிஷாளன் – தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

லனுஜன் நவரட்ணம் – தரம் 3
North Bridlewood Junior Public School, Scarboough, Canada

ஏ. அக்ஷயா – தரம் 8
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

உ. ஆராதனா – தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

உ. ரோஷித் – தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

ராமதாசன் ஹர்சிகா – தரம் 4
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

கே. நிருஜிகா – தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

பை. ஹண்சிகா – தரம் 4
யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்

அஸ்ரிகா பைசர் – ஆரம்ப உயர்தரம்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

கி. துஷாந்த் – தரம் 8
தி/செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்

சி. சிவகலை – தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

சந்திரகுமார் அவிநாஷ் – தரம் 4
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

ஏ. சதுர்யா – தரம் 8
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

ஞா. ரிசாந் – தரம் 3
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ச. பவிஷனா – தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

என். வித்யாசாகர் – தரம் 9
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

எஸ். ஏ. எஸ். பர்வின் – தரம் 8
ஹிஜ்ரா முஸ்லிம் கனிஷ்ர வித்தியாலயம், அம்பன்பொல

வி. சலோமி – தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

கு. கிஜானிகா – தரம் 2
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

கு. கஜோரிகா – தரம் 5
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

வி. விகன்யா – தரம்
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

கி. அஸ்வதா – தரம் 4
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

அன்றியா தக்ஷரா காண்டீபன் – தரம் 2
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

## காலைக்கதிர் Kalaikathir

**வீதி விபத்து**



16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

தினம் ஒரு தலைப்பு

## சித்திரப்போட்டி

**இன்று (22/06/2020) தலைப்பு**
**வீதி விபத்து**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோ ரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**